தமிழ் முரசு

2-3

மக்கள் தலைவர் மறைந்தார்

"காந்தி யடிகள் கொல்லப்பட்டார்!" என்ற திடுக்கிடும் செய்தி 'முரசு' அச்சாகி முடிந்த பின்னர் கிடைத்தது.

இந்திய சமுதாயத்தின் வரலாற்றிலேயே இம்மாதிரி வேதனை தரும் செய்தி வேறொன்றில்லை. அதிலும் காந்தியடிகள் எந்த நாட்டினர் சுதந்திரமடையவும் சுகவாழ்வு பெற உழைத்தாரோ, அதே நாட்டின் சதிகாரக் கூட்டம் ஒன்றின் தூண்டுதலால் கொல்லப்பட்டது உலகத்தின் முன்னர் இந்தியாவை தலை குனியச் செய்து விட்டது.

கடந்த முன்னூறு ஆண்டு அடிமைத்தனத்தில் நாம் அடைந்த வெட்கத்தையும் துக்கத்தையும் காந்தியடிகள் தோன்றிப் போக்கி விட்டார். ஆனால், காந்தியடிகளைக் கொன்ற பாதகத்தால் நேர்ந்துள்ள வெட்கத்தையும் துக்கத்தையும் போக்குவார் யார்?.

அண்ணல் காந்தியடிகள் கதிரவன் மறையும் அந்தி நேரத்தில் தமது கடிகாரத்தைப் பார்த்து, "பொழுது போகிறது போய் வருகிறேன்" என்று பட்டேலிடம் கூறினார். ஆம்; வாழ்க்கைப் பொழுது சாய்ந்து விட்டது! அவரது கடிகாரம் காட்டிய நேரம் காந்தியடிகளின் மண்ணுலக வாழ்விற்கு இறுதி நேரமாகி விட்டது. நாடு வாழ்வதற்கு

III

பிரார்த்தனை செய்ய மேடையை நாடிச் சென்றார் அடிகளார். ஆனால், அந்த மேடையின் அருகில் அவர் வாழ்வைப் பறிக்க கொலை பாதகன் ஒருவன் கூற்றுவன் வடிவில் நின்று அவர் உயிரை உண்டான். "தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்" என்றார் வள்ளுவர். ஆம்; அந்தக் கூற்றுவன், அடிகளை நோக்கிக் கும்பிட்ட கரமே கொலைக் கரமானது!

டெல்லியில் வந்து குவியும் அகதிகளுக்கு ஆறுதல்கூற, அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்க, அந்த அகதிகளை மதவெறியால் பழிவாங்கக் காத்திருக்கும் கூட்டத்திடமிருந்து அவர்களைப் பாதுகாக்க அண்ணல் காந்தி டெல்லியில் தங்கினார். ஆனால், அகதிகளின் காவலர் கொல்லப்பட்டதன் விளைவாக இந்தியா முழுவதுமே அகதிகள் முகாம் ஆகிவிட்டது. நமக்கு ஆறுதல் கூறுவார் யார்?

காந்தியடிகளின் சேவை இல்லாவிடில் இந்தியா இந்நேரம் எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் நமது நெஞ்சு திடுக்கிடுகிறது. இனியும் அவரது சேவை தேவைப்பட்டிருக்கும் நேரத்தில் அவரை நாம் இழந்துவிட்டோம்.

காந்தியடிகளைக் கொன்ற சக்தி எது? மக்கள் சக்தியா? இல்லை; மதவெறி. மதவெறிக்கு மக்கள் தலைவர் மகாத்மா மனமொப்பவில்லை. சுதந்திர இந்தியாவை மதவெறியர் ஆளவிடாது மக்கள் சக்தி ஆளவேண்டுமென்பதே மகாத்மாவின் கருத்து. அவரது உபதேச மொழிகள் உன்னுவிர்தங்கள் அத்தனையும், இந்து சாம்ராஜ்யத்தை மீண்டும் காண விரும்பிய மதவெறியர்களின் எண்ணத்தில் மண்ணைவ

தாயின. எனவே, அண்ணலின் ஆவியைப் பலிகொண்டு தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினர் வெறியர்கள்.

இழக்க விரும்பாத, இழக்கக்கூடாத, இழந்தால் மீண்டும் பெறமுடியாத பெருஞ் செல்வத்தை இழந்து விட்டோம். இனி அழுது பயனில்லை. "அடுத்தபடி என்ன?" என்பதைச் சிந்திப்பதே அறிவுடைமை. காந்தியடிகள் இருந்த இடத்திற்கு முற்றும் தகுதியுடைய ஒருவரைப் பெறுவது அரிது. என்றாலும், காந்தியடிகள் தம் வாழ்நாளிலேயே 'எனக்கு அடுத்த வாரிசு பண்டித நேருவே ஆவார்' என்று கூறியிருந்ததை ஒட்டி, நேருவை தலைவராகக் கொள்வோம். அவர் காட்டிய ஆணை வழி கடமையைச் செய்வோம். அவரைச் சூழ்ந்துள்ள சுயநல சூழ்ச்சிக் கூட்டத்தாரால் அவருக்கும் இந்திய-உபகண்டத்துக்கும் கேடு வராது காப்போம். இதுவே காந்தியடிகளின் ஆவி அமைதிபெற நாம் அளிக்கும் அன்புக் காணிக்கை.

வாழ்க காந்தியடிகளின் திருநாமம்!

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : உ | ஆசிரியர் : ம. பொ. சிவஞானம் | பகுதி ௯

பொருளடக்கம்

தலைவர் 'தீர்ப்பு'!	தலையங்கம்	... உ
கோவையில் நடந்ததென்ன ?	சி. வே.	... ௬
செய்திகள்		... க௫
நாத்திகம் எது ?	மு. கோவிந்தசாமி	... க௭
வாழ்க பொன்னாடு	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	... உ௪
அந்த நாள் (தொடர் கதை)	மு. வரதராசனார்	... உ௬
கலைக் களஞ்சியம்	அன்பு கணபதி	... ௩௬
செய்திகள்		... ௪௫
மதிப்புரை		... ௫௬

விலை 4 அணா   1-2-48

தலைவர் 'தீர்ப்பு!'

ம. பொ. சிவஞானம்

கோவை அரசியல் மாநாடு, நான் கடந்த இதழில் குறிப்பிட்டதுபோல காஞ்சீவரம் மாநாடாக முடியவில்லை. மாகாணப் பிரிவினைத் தீர்மானத்தின் மீது நான் கொண்டு சென்ற திருத்தத்திற்குப் பிரதிநிதிகளிடையே யிருந்த மகத்தான ஆதரவைக்கண்டு எனக்கே திகைப்பேற்பட்டது. கடந்த ஓராண்டாக தமிழரசுக் கழகம் செய்துவந்த பிரசாரத்தால் காங்கிரஸ்காரரிடையே எவ்வளவு மாறுதல் உண்டாகியிருக்கிறதென்பதைக் கோவையில் நான் நேரில் கண்டேன். ஆம்; திருப்திகரமான மாறுதல்.

தலைவர், "தீர்ப்பு" என்ற வாளை எனது திருத்தத்தின்மீது வீசியிராவிடின்—என்னைப் பேசவிடாது தடுத்திராவிடின்—எனது திருத்தம் நூற்றுக்கு எண்பதுக்கு மேற்பட்ட வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்குமென்பது திண்ணம். அப்படி நிறைவேறியிருந்தால் காங்கிரஸ்காரர்களின் தமிழ் இனவுணர்ச்சியை—தமிழ்நாட்டுப் பற்றுதலை—தமிழரசு ஆர்வத்தை—வடநாடு தெள்ளத்தெளிய உணர்ந்திருக்கும். ஆனால், அந்த நிலை ஏற்படாது தடுத்த 'பெருமை' தலைவர் காமராஜருக்கே உரியது. இது தமிழினம் என்றென்றும் மறக்கமுடியாத, மன்னிக்க முடியாத தவறாகும்.

நான் விஷயாலோசனைக் கமிட்டிக்கு முன்கூட்டியே ஒரு தீர்மானம் அனுப்பியிருந்தேன். அது பின்வருமாறு:

இந்தியாவைத் தாமதமின்றி, மொழிவாரி நாடுகளாகப் பிரிக்கவேண்டுமென்றும், அப்படிப் பிரிக்கப்பட்ட நாடுகளில் வாழும் மக்கள் இந்திய ஐக்கியத்துக்குப் பாதகமில்லாமல் தங்கள் தாயகத்தில் சுதந்திர சோஷலிசக் குடியரசை அமைத்துக்கொள்ள உரிமை வழங்கவேண்டுமென்றும் இம் மாநாடு மத்திய அரசாங்கத்தாரை வற்புறுத்துகின்றது. இதன்படி தமிழ் நாட்டைத் தனி நாடாக்கி, அதில் சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைக்கும் வகையில் திட்டமிட்டு வேலை செய்யுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு இம் மாநாடு கட்டளையிடுகிறது.

இந்தத் தீர்மானத்தைத் தலைவர் காமராஜர் விஷயாலோசனைக் கமிட்டியின்முன் வைக்கக் கடமைப்பட்டவர். என்றாலும், அவர் அதை அக்கமிட்டியின் முன் வைக்கவில்லை. நான் விஷயாலோசனைக் கமிட்டியின் உறுப்பினன் அல்ல. ஆகையால், எனது தீர்மானத்தின் கருத்தை ஏதாவதொரு திருத்தத்தின் மூலமாகவேனும் மாநாட்டினர் முன்கொண்டு வருவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது.

எனது திருத்தத்தில் தலைவர் நிராகரித்த பகுதி 'தமிழகத்தில் சோஷலிசத் தமிழ்க் குடியரசு அமைய வேண்டும்' என்பதேயாகும். இந்தக் கருத்து தலைவர் காமராஜருக்கு பிடிக்காதிருக்கலாம்; அல்லது இது நிறைவேறினல் மேலிடத்தார் அவர்மீது ஐயம் கொள்வார்களோ என்று அஞ்சியிருக்கலாம். ஆனல், அதற்காக ஜனநாயகமற்ற முறையில் எனது திருத்தத்தை நிராகரித்ததன் மூலம் தமிழ் நாட்டினரின் வெறுப்புக்குப் பாத்திரமாகி விட்டார். அவரது 'தீர்ப்பை' எதிர்த்து மாநாட்டில் நடந்த அமளியே இதற்குத் தக்க சான்று.

திருத்தத்திற்கான காரணங்களை விளக்க விடாமல், 'திருத்தத்தை ஆமோதிப்பவர் உண்டா?" என்று அறிந்து கொள்ளாமல், அவசரப்பட்டு நிராகரித்தது அரசியல் நியதிக்கே புறம்பானது. அதுவும் நெடுநாளைய அரசியல்வாதியும்-சென்னை அசெம்பிளி —இந்தியப் பார்லிமெண்டின் உறுப்பினர், இத்தகை பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்து அனுபவம் பெற்ற காமராஜர் பொறுப்பற்ற முறையில், அரசியல் நியதிக்குப் பொருந்த வகையில் எனது திருத்தத்தை நிராகரித்தது வியந்தக்கதே.

முன்பொருமுறை பாகிஸ்தான் தீர்மானத்தை ராஜாஜி அகில இந்திய காங்கிரசுக்குக் கொண்டு போனபோது, அப்போது தலைவராக இருந்த மௌலானு ஆசாத், காமராஜரைப் போன்று கண் மூடித்தனமாக அதை நிராகரிக்கவில்லை. விவாதத்

திற்குவிட்டு, வோட்டெடுத்தார். இதைக் காமராஜர் மறந்தார் போலும்!

எனது திருத்தம் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்திற்கு விரோதமானது என்றார் காமராஜர். இது உண்மையல்ல.

1942-ஆம் ஆண்டில் கிரிப்ஸ் இந்தியா வந்திருந்தபோது, காங்கிரஸ் காரியக்கமிட்டி செய்த தீர்மான மொன்றில், பிரதேசவாரி சுய நிர்ணய உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

கிரிப்ஸ் கொண்டுவந்த திட்டத்தில் மாகாணங்கள் இஷ்டப்பட்டால் மத்தியில் கலக்கலாம். இல்லாவிட்டால், விலகி நிற்பதற்கு அல்லது தமக்கு இஷ்டமான வேறு மாகாணம் அல்லது மாகாணங்களுடன் சமஷ்டி சேர்ந்துகொள்வதற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இதைக் காங்கிரஸ் காரியக்கமிட்டி ஏற்றுக்கொண்டது. (கிரிப்ஸ் தூது தோல்வியுற்றதற்குக் காரணம், யுத்த காலத்தில் மத்தியில் தேசிய சர்க்காரை அமைக்க பிரிட்டிஷார் மறுத்ததேயாகும்.)

பிரிட்டிஷ் மந்திரிசபைத் திட்டப்படி போக்குவரவு, ராணுவம், அந்நிய நாட்டு அரசியல் ஆகிய மூன்றையும் மத்திய சர்க்கா

ருக்கு விட்டுக்கொடுத்து, ஏனைய எல்லா அதிகாரங்களையும் கொண்ட தனியரசாக இருக்க விரும்பிய அஸ்ஸாம் மாகாணத்துக்கு காரியக் கமிட்டி ஆதரவு காட்டியிருக்கிறது.

அண்மையில், பாகிஸ்தான் அனுமதிக்கப்பட்ட பிறகு, பாகிஸ்தானில் பட்டாணிஸ்தான் கிளர்ச்சி நடத்தும் டாக்டர் கான் சாகிபுக்கு ஆதரவு காட்டி காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இவ்வளவையும் தலைவர் காமராஜர் மறந்திருக்க முடியாது. திரு. காமராஜர் தமிழ்க் குடியரசு என்ற வார்த்தையே திருத்தத்தில் இருக்கக்கூடாது என்று என்னிடம் கூறினார். அவருடைய கருத்துப்படி, எதிர்காலத் தமிழகம் அரசுரிமையற்ற ஒரு நிர்வாகப் பிரதேசம் போலும்.

'தமிழ்க் குடியரசு' என்று சொல்வதே ஐக்கிய இந்தியாவுக்கு முரணானது என்று காமராஜர் கூறினார். "கிராமணியார் கேட்பது தனி ஸ்டேட்" என்றும் பிரதிநிதிகளுக்கு பூச்சாண்டி காட்டினார். பல தனியரசுகள் கொண்டதுதான் ஒரு சமஷ்டி. அஃதின்றி ஆட்டிவைத்தபடி ஆடுகின்ற பல நிர்வாகப்

பிரதேசங்களைக்கொண்ட ஒரு அரசாங்கம் சர்வாதிகாரசாம்ராஜ்யமே யொழிய, சமஷ்டியல்ல. இதைக் காமராஜர் அறியார் போலும்! "யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா" என்பதற்கு பல குடியரசுகளைக் கொண்ட அமெரிக்கக் கூட்டரசு என்பதன்றோ பொருள்? அமெரிக்காவில் பல்வேறு தனிக் குடியரசுகள் ஒரு கூட்டரசில் கலக்கமுடியுமானல், இங்குமட்டும் 'தமிழ்க் குடியரசு' சமஷ்டியோடு கலக்கமுடியாத ஒரு தனியரசு என்று பயப்படுவானேன்?

இஷ்டப்பட்டால் பிரியும் உரிமையுடன் கூடிய தனித்தனி குடியரசுகளின் சேர்க்கைதானே இன்றைய சோவியத் சமஷ்டி. அதேபோன்று இந்தியாவிலும் சுதந்திரக் குடியரசுகளின் கூட்டரசை ஏன் அமைக்கமுடியாது? இந்த உண்மைகளைக் காமராஜரும் அவருக்கு ஆலோசனை கூறுவோரும் இனியேனும் சிந்திப்பார்களாக!

பொதுவாக, கோவையில் கூடிய காங்கிரஸ் பிரதிநிதிகள் தலைவர் காமராஜரைப்போல் அல்லாமல், எனது திருத்தத்தின் கருத்தை அறிந்து, தமிழினத்தின் உரிமையைக் காக்க உணர்ச்சிகொண்டு, மாநாட்டுத் தலைவரின் 'தீர்ப்பை' எதிர்த்துக் கிளர்ச்சி செய்தமைக்கு எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனல், அவர்கள் இதோடு நின்று விடக் கூடாது. சுதந்தரத் தமிழகத்தைக் காண, அதில் சோஷலிசத் தமிழ்க் குடியரசை நிறுவ இடைவிடாது பாடுபடுவதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். அதற்காகப் பாடுபடும் ஒரே அமைப்பாகிய தமிழரசுக் கழகத்தில் சேரவேண்டும்.

கோவையில் நடந்ததென்ன?

சி. வே.

கோவை அரசியல் மாநாடு நடந்து முடிந்தது. என்ன நேருமோ? எது வருமோ? என்று அஞ்சிய அதிகாரிகள் பலமான போலீஸ் பாதுகாப்புகள் செய்திருந்தனர். மில் பிரதேசங்களில் போலீஸ் படை முற்றுகை போட்டிருந்தது. 17-ந் தேதி மாலை மாணவர் காங்கிரசின் ஆதரவில், திரு. ம. பொ. சி. பேசுவதாக இருந்த பொதுக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அந்தக் கூட்டம் தமிழர் திருநாளை ஒட்டித்தான் கூட்டப்படுகிறது என்று மாணவர் காங்கிரஸ் செயலாளர் திரு. ரசிதாசலம் அதிகாரிகளுக்கு விளக்கியும்கூட அனுமதி கிடைக்கவில்லை.

ஜனவரி 18-ந் தேதி பிற்பகல் மாநாடு ஆரம்பமாயிற்று. திரு. சி. பி. சுப்பையாவின் வரவேற்புரை மிக அருமையாகவும் பொருள் செறிந்ததாகவும் இருந்தது. அவர் தம்மையும் திரு. காமராஜரையும்பற்றிப் பேசுகையில், "காமராஜர் சத்தியமூர்த்தியின் குதிரை. அடியேன் ராஜாஜியின் குதிரை" என்று குறிப்பிட்டார். இதைக் கேட்டு என் பக்கத்திலிருந்த ஒருவர் "ஏறுகின்ற எசமானர்களும், சுமக்கின்ற ஜீவன்களும்தான் காங்கிரஸிலிருக்கின்றன போலும்" என்று கோபத்தோடு கூறினார். எசமானர்களிடமிருந்து குதிரைகள் விடுதலை பெற்று எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன ஐயா, நண்பர் சுப்பையா சொன்னது பழங் காலத்தைப்பற்றிய நகைச் சுவைக்கற்பனை." என்றுகூறி அவர் வாயை அடக்கினேன். "தலைவர் காமராஜர் மக்களை மறந்து மந்திரிகளைச் சார்ந்து நிற்கிறார்" என்று தலைவர் தேர்தலில் திரு. ம. பொ. சி, அவர் மீது குற்றம் சாட்டினார். இதை நிரூபிக்கத்தானோ என்னவோ கல்வி அமைச்சர் அவினாசியார் தலைவரைப் பிரேரேபிக்க, உணவு அமைச்சர் டாக்டர் ராஜன் ஆமோதித்தார். "முன்பெல்லாம் தமிழ், தமிழர் என்றால்

லாம் கூறுவது குறுகிய புத்தி, தேசியத்திற்கு விரோதமானது என்றெல்லாம் கூறினோம். ஆனால், இன்று காலம் மாறி விட்டது'' என்று திரு. சுப்பையா குறிப்பிட்டது மிக மிகப் பாராட்டத்தக்கது.

திரு. காமராஜர் தமது தலைமையுரையில், நாட்டின் நிலைமையை நன்கு ஆராய்ந்து வருங்காலத்திற்கு வழி காட்ட வில்லை. ''காங்கிரஸுக்குத் திட்டம் இல்லை'' என்று குறிப் பிட்டார். ஆனால், தமது திட்டம் இன்னது, அல்லது மேலிடத்தார் இன்ன வகையில் திட்டம் வகுக்க வேண்டும் என்று விளக்க வில்லை. பொதுவாக, சாதாரண ஊழியரா யிருந்து மாகாணத் தலைமைப் பீடத்தைப் பிடித்து அதிலே எட்டாண்டுகளாக வீற்றிருக்கும் ஒரு தலைவர்க்குரிய அனுபவத்தை அவரது பேச்சிலே காணமுடியவில்லை.

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான். பெரும்பாலான தீர்மானங்கள் காங்கிரஸ் மேலிடத்தாருக்கும் சென்னை அரசாங்கத்தாருக்கும் சிபார்சு செய்யப்படுவதாக இருந்தனவே யொழிய, தமிழகத் துக் காங்கிரஸ் வாதிகள் தாமே நிறைவேற்றத் தீர்மானிக்க வில்லை; திட்டமிடவில்லை; குழு அமைக்கவில்லை.

திரு. காமராஜரின் தலைமையுரை முடிந்ததும் பிரதிநிதி களும், பார்வையாளரும் கலையத் துவங்கினர். அதற்குள் மாநாட்டுத் தலைவர் மீண்டும் ஒலிபெருக்கியின் முன்னே வந்து பிரதிநிதிகளைப் பார்த்து, ''கொஞ்ச நேரம் அமைதியா யிருங்கள். இந்த நான்கு தீர்மானங்களை மட்டும் இன்றே நிறைவேற்றி விடலாம்' என்று கூறி, தீர்மானங்களைப் படிக்க ஆரம்பித்தார். அவையாவன: (1) இறந்தவர்களுக்கு அனு தாபம். (2) தியாகிகளுக்கு வணக்கம். (3) காந்தி யடிகளின் உண்ணாவிரத வெற்றிக்குப் பாராட்டு. (4) மொழி வாரி மாகாணப் பிரிவினைக் கோரிக்கை.

இதில் முதல் மூன்று தீர்மானங்களும் சாதாரண மானவை. அவற்றைத் தலைவரே பிரேரேபித்து, பிறர் பேச வதற்கு இடந்தராமல் ஏகமனதாக நிறைவேற்றி விடுவது இயற்கைதான். ஆனால், நான்காவது தீர்மானம் அத்தகைய தல்ல. அது இன்றைய தமிழகத்தின் முதல்தரமான பிரச்சினை. அப்படியிருக்க, அதையும் மாநாடு கலைந்து கொண்டேயிருக்கும் சந்தர்ப்பம் பார்த்து, தலைவர் தாமே படித்து நிறைவேற்றத் துணிந்தது ம. பொ. சி. க்குத் திகைப்பை அளித்தது. அந்த தீர்மானத்தின் மீதுதான் ம. பொ. சி. தமிழகத்தின் சுயநிர்ணய பிரச்னையை எழுப்பப் போகிறார் என்ற செய்தி மாநாட்டுக்கு வந்திருந்த தலைவர்கள் வட்டாரத்தில் முன்னாள் இரவே பரவியிருந்தது. எனவே ம. பொ. சி.க்கு அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கா திருக்க காமராஜர் மாகாணப் பிரிவினைத் தீர்மானத்தை, தலைமைப் பீடத்திலிருந்தே படித்து நிறைவேற்ற விரும்பினார் போலும்!

அந்த நிலையில், திரு. ம. பொ. சி. தலைவர் காமராஜரை அணுகி, நான்காவது தீர்மானத்தைத் தலைவரே பிரேரே பிப்பது முறையல்லவென்றும், அதன்மீது, தான் முக்கியமான ஒரு திருத்தத்தைக் கொடுக்க இருப்பதாகவும் கூறினார். பிரதி நிதிகளோடு, பார்வையாளரும் கலந்திருப்பதால் தீர்மானத் தையோ அல்லது ம. பொ. சி. கொண்டுவர விரும்பும் திருத் தத்தையோ விவாதத்திற்கு விட்டு வாக்கெடுப்பது கஷ்டமாக இருக்குமென்று காமராஜர், ம. பொ. சி. யிடம் கூறினார்.

“அப்படியானால், பிரஸ்தாப தீர்மானத்தையே நாளைக் குத் தள்ளிப் போடுங்கள்” என்றார் ம. பொ. சி. தலைவர் காமராஜர் இதற்குச் சம்மதித்ததுடன் மாகாணப் பிரிவினை தீர்மானம் மட்டுமல்லாமல் மற்ற மூன்று தீர்மானங்களையும் கூட மறுநாளைக்குத் தள்ளிவைத்து விட்டார். இதிலிருந்து மாகாணப் பிரிவினை தீர்மானத்திற்கு ம. பொ. சி. கொடுக்

விருந்த திருத்தத்தை நிராகரிக்கும் எண்ணமே தலைவர் காமராஜருக்கு முதல் நாள் இல்லை என்பது தெளிவாகிறது.

மறுநாள் காலை நிறைவேறிய தீர்மானங்களில், இந்தியாவில் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கான திட்டங்களை வகுக்குமாறு காங்கிரஸ் மேலிடத்தாருக்கு விண்ணப்பம் செய்யும் தீர்மானம்தான் முக்கியமானது. இதன்மீது ம. பொ. சி. பேசினார். (அதன் விவரம் அடுத்த இதழில் வெளிவரும்) அவரது பேச்சுக்குப் பிரதிநிதிகளிடையே அமோக வரவேற்பு இருந்தது. கணத்திற்குக் கணம் கைதட்டல். அதுவும் அமைச்சர் அவனாசிலிங்கனாரின் சோஷலிசப் பற்றுதலை நாசூக்காகத் தாக்கியபோது, பந்தல் முழுவதும் ஒரே சிரிப்பு. தலைவர் காமராஜர்கூட ஓரிடத்தில் 'கொல்'லென்று சிரித்ததோடு பலமாகக் கைதட்டியும் ஆமோதித்தார்.

ஒரு காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் மேலிடத்துத் தலைவரை இவ்வளவு அழுத்தமாகக் கண்டிப்பதும் அதற்குப் பிரதிநிதிகள் கைதட்டி ஆரவாரிப்பதும் புதுமையாகத்தான் இருந்தது. இந்தப் புதுமையைச் செய்ய ம. பொ. சி. யிடமிருந்த சக்தி என்ன என்பதை ஆதிக்கவாதிகள் புரிந்து கொண்டு விட்டனர். அதனால்தான் முன்னுள் எண்ணியதற்கு மாருக, மறுநாள் மாலை ம. பொ. சி. கொண்டுவந்த திருத்தத்தை நிராகரித்து அவரைப் பேச விடாமல் உட்கார வைக்க முயன்ருர் தலைவர் காமராஜர். ஐதராபாத் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தருவதுபோன்ற தீர்மானங்கள் பல நிறைவேறிய பிறகு இடைவேளைக்காக மாநாடு கலைந்தது.

[தொடரும்]

தமிழர் திருநாள்

சென்னை :—மாநிலத் தமிழரசுக் கழகத்தின் ஆதரவில் பொங்கலன்று மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி திலகர் கட்டத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கினார். திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சொற்பொழிவாற்றினார். தமிழரசுப் படையினர் கூட்டத்தில் பங்கு கொண்டனர்,

ஜனவரி 13-ந் தேதி மாலை 6 மணிக்கு சூளை வ. உ. சி. ஞாபகார்த்த சங்கத்தினர் திரு. சி. வேங்கடசாமி தலைமையில் தமிழர் திருநாள் கொண்டாடினர். பலர் சொற்பொழிவாற்றினர்.

ஜனவரி 15-ல், பிரம்பூர் மறுமலர்ச்சி மன்ற சார்பில் கலவல கண்ணன் உயர்நிலைப் பள்ளியில் திரு. ச. ஆறுமுகம் தலைமையில் தமிழர் திருவிழா நடைபெற்றது. திருவாளர்கள், செங்கல்வராயன், வ. ரா, சு. கி. ஜானகிராமன், மா. தண்டபாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை முஸ்லீம் கல்லூரியில் 15-1-48 மாலை 4-30 மணிக்கு தமிழர் திருநாள் நடைபெற்றது. மாணவர் தலைவர் ஜனாப் அப்துல் காதர் தலைமை வகித்தார். திரு. ம. பொ. சி. தமிழர் பண்பாட்டைப் பற்றியும், சமய வேற்றுமைகளை மறந்து தமிழர் ஓரினமாக வாழ வேண்டிய அவசியத்தைக் குறித்தும் பேசினார். மாணவர்களும் மாணவிகளும் திரளாகக் கூடியிருந்தனர்.

நற்சாந்துபட்டி :—இவ்வூர் தமிழரசுக் கழக ஆதரவில் தமிழர் திருநாள் சிறப்பாக நடைபெற்றது திரு. மு. அண்ணாமலை வரவேற்புரை கூறினார். திரு மாணிக்கம் தலைமையில் திருவாளர்கள் கோ. மோ. ஜனார்த்தனம், கோனாபட்டு, மெ. சுந்தரம், திருச்சி. ஆர். மோகன் ஆகியோர் பேசினர். கலைமகள் கல்லூரி மாணவிகள் இன்னிசை முழக்கத்துடன் விழா முடிவுற்றது.

முத்துப்பேட்டை :— தமிழரசுக் கழகக் கிளையின் ஆதரவில் ., உ. சி. மைதானத்தில் திரு. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் டைபெற்றது. திரு. சண்முகசுந்தரம் பிள்ளை பிரார்த்தனைப் பாடல் ாடியதும், திரு. சந்திரசேகரன் தமிழரசுக் கொடியை (அடிப்பாகம் வப்பு, மேல்பாகம் வெண்மை, அதில் வில், புலி, கயல் சின்னங்கள் பாறித்தது) ஏற்றிவைத்தார். பலர் சொற்பொழிவாற்றினர். கழக செயலாளர் நன்றி கூறினர்.

சாம்புவனேடை (திருத்துறைப்பூண்டி தாலூக்கா) :— இவ்வூர் ள்ளிவால் திடலில் திரு. தி. ராவுத்ததேவர் தலைமையில் தமிழர் ிழா இனிது நடைபெற்றது. திருவாளர்கள் ரெ. கு. பண்டரிநாதன், ா. வயிரப்பன், இரு. நி. மாணிக்கம், மா. சோமசுந்தரம், தி. சிவராமு, காபால், மு. மா. முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * * *

கோவை ;— கோவை மாவட்ட தமிழரசுக் கழக ஆதரவில் னவரி 21-ந் தேதி மாலை டவுன் ஹால் மைதானத்தில் திரு. அருணை லம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் ட்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். திரு. கு. சா. ிருஷ்ணமூர்த்தி தமிழர் திருநாள் பற்றி பேசிய பின்னர், திரு. , பொ. சிவஞானம் சுமார் $1\frac{1}{4}$ மணி நேரம் கோவை அரசியல் மாநாட் ல் தாம் பிரேரேபித்த சோஷலிசத் தமிழ்க் குடியரசுத் திருத்தம் ற்றியும், மாநாட்டுத்தலைவர் திரு. காமராஜர் அதை நிராகரித்ததையும் ளக்கிப் பேசினர்.

இதே நாளில் மாலை 4-30 மணிக்கு கோவை கலைக்கல்லூரியில் மிழ்ப்பேராசிரியர் மு. இராசாக்கண்ணு தலைமையில் திரு. ம.பொ சி மிழ்க கலையின் மாண்புபற்றி பேசினர். தமிழ்ச் சங்க செயலாளர் ்றி கூறினர்.

பொள்ளாச்சி:ஜனவரி 17-ந் தேதி பிற்பகல் 3 மணிக்கு கோவை வட்ட காங்கிரஸ் ஊழியர்மாநாடு பொள்ளாச்சி நாராயணு டாக்கீசில்

நடைபெற்றது. திரு. சட்டநாதக் கரையாளர் தலைமை வகித்தார். திரு. வல்லத்தரசு தேசியக்கொடி ஏற்றினார்: திரு. எஸ். ஏ. ரகீம் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

திருவாளர்கள் எஸ். பி. ஆதித்தன், கே. எஸ். ஏகாம்பரம், ஹரிஹரன், ம. பொ. சி. மற்றும் பலர் பேசினர். தொழிலாளர் மக்களின் வாழ்க்கை உயர்வுக்கும், **தமிழகத்தில் சுய நிர்ணய அடிப்படையில் சோஷலிசத் தமிழ்க் குடியரசு** அமைக்கவும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி திட்டமிட்டு வேலை செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

மதிப்புரை

தமிழரிடையே அன்புப்போர் :—

ஆசிரியர்கள் : திருவாளர்கள் சி. ஆர். பழனியாண்டி, கே. வி. வீரராகவன், பி. ஏ., பி. எல்.; வெளியீட்டோர் : நியூ இந்தியா புக் ஹவுஸ், இராமசந்திரபுரம், புதுக்கோட்டை; 80 பக்கம் விலை : ரூபாய் ஒன்று.

அரசியல், இலக்கியம், வாணிபம், பத்திரிகை, கலை முதலிய பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களையும், இளைஞர்களையும் தாமறிந்த வகையில் ஆசிரியர்கள் தமிழ் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றனர். பெண் மணிகள், மாணவர் ஆகியோரையும் சேர்த்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். கூடியவரையில் அவரவர்களின் நடையிலேயே விமரிசனம் கூற முயன்றிருப்பதைப் பாராட்டுகிறோம்.

வெளிவந்துவிட்டது!

தமிழன் குரல்

தமிழரசுக் கழகத் தலைவர்—'தமிழ் முரசு' ஆசிரியர்

திரு. ம. பொ. சிவஞானம் எழுதியது

புதிய தமிழகத்தை—தமிழகத்தில் தனியரசைக் காண
விரும்பும் தமிழ் இனத்தவருக்கு இந்நூல் வழிகாட்டி.

விலை ரூபாய் இரண்டு

●

கப்பலோட்டிய தமிழன்	1-4-0
சிலப்பதிகாரமும் தமிழரும்	0-8-0

இன்ப நிலையம்

தியாகராயநகர்
சென்னை-17

'தமிழ் முரசு'

உங்களுக்கு தவறாது கிடைக்க வேண்டுமா? எங்களிடம் சந்தாதாராகப் பதிவு செய்து கொண்டால் உங்கள் இல்லம் தேடி குறித்த காலத்தில் வந்து சேரும்.

கட்டண விபரம்: (தபாற் செலவு உள்பட)

ஆண்டு ஒன்றுக்கு — ரூ 6-0-0
ஆறு மாதத்திற்கு — ரூ 3-0-0

'தமிழ் முரசு'ப் பதிப்பகம்

1/29 இருசப்ப கிராமணி தெரு
திருவல்லிக்கேணி, ● சென்னை-5

நாத்திகம் எது?

மு. கோவிந்தசாமி

கடவுள் உருவத்தை வழிபடுவார் ஆத்திகர்; வழிபடாதார் நாத்திகர். இவையே ஆத்திக நாத்திகருக்குரிய இலக்கணமாகக் கொள்ளப்படுகிறது. உருவ வழிபாடு செய்பவன், கடவுள் தன்மையில் வாழவில்லையானால், அப்போது அவன் ஆத்திகனா? 'இல்லை' என்பதே விவேகானந்தரின் கொள்கை.

ஆகவே உருவ வழிபாடு செய்வதும் செய்யாததும் அவரவர் விருப்பம்; சூழ்நிலை; காலப்போக்கினைப் பொறுத்தது. ஆனால் ஆராய்ச்சியின் முடிவென்ன?

கடவுள் தன்மையை வணங்குபவன் — அவ்வழி வாழ்ந்து காட்டுபவன் ஆத்திகன்.

கடவுள் தன்மையை வணங்காதவன் — அதன்வழி வாழாதவன் நாத்திகன்.

இதுவே சமயப் பெரியார்களின் முடிந்த கொள்கையுமாகும். அப்பரும்,

> 'பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
> நக்கு நிற்பன் அவர்தமை நாணியே'

என்கையில், உருவ வழிபாடென்னும் போர்வையில் நடத்தும் நாத்திக வாழ்வினை—கடவுள் தன்மைக்கு மாறான அன்பற்ற நெறியினை—கடிந்திருக்கிறார்.

இனி, கடவுள் தன்மை என்பது யாது? உயர் மனிதத் தன்மையே அது; மனிதன் சிறக்கும் நுண்ணறிவின் நுனியே அது. வள்ளுவர் மொழியில், உலகத்தோடு, நாட்டின் நல்வாழ்வினோடு, இசைந்து நடத்தும் மாசற்ற வாழ்வே யாகும். சுருங்கக் கூறின், அறிஞரால் அவ்வக் காலங்களில் எவை மனிதற்கு வேண்டிய கடந்த சிறந்த இயல்புகள் என ஒப்புக்கொள்ளப்படுமோ அவற்றையே பற்றி நடத்தலாம். அவ் வியல்புகள் காலந்தோறும் மாறியே வந்துள்ளன; உடன் அவ்வக் காலைக் கடவுள் தன்மையும் மாறி நினைக்கப் பட்டு வந்துள்ளன.

இத்தன்மைய வாழ்வுதான் அற வாழ்வு; கடவுட்கு அடுத்து, (2-ம், அதிகாரத்தில்) வள்ளுவர் மொழியும் வாழ்வு. ஆண்டவன் 'அறவாழி அந்தணன்' என்கிறார் அவரே. 'நன்றுடையானைத் தீயதிலலானை' என நவின்றார் நாவுக்கரசரும். இந்த நன்மையைப்பற்றி மேனாட்டுத் தத்துவப் பேரறிஞரெல்லாம் எண்ணற்ற நூல்களில் எவ்வளவோ மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

அப்படியானால், இன்று கடவுள் தன்மையென நம் நாட்டின் பெரும்பான்மை அறிஞரால் ஓதப்படுவன யாவை?

"சாதி, சமய, நிற வேற்றுமை யழிக! தனியுடைமை வீழ்ந்து பொதுவுடைமை ஓங்குக! நாட்டால், மொழியால், சமூகத்தால் வரும் அடிமை தொலைக! மூட நம்பிக்கை அறுக!" இவை தாமே அவர்களின் எண்ணம்? தீமையை அழிக்க முயல்பவன் ஆத்திகன்; தீமையை வளர்க்க நினைப்பவன் நாத்திகன். இந்த முடிவினை, யாரேனும் மறுக்க முடியுமா?

இன்று, சாதி, சமய வேற்றுமையை வளர்க்கும் இனமொன்று இருக்குமாயின், அதுவன்றோ நாத்திகம்! பொதுவுடைமையை எதிர்க்கும் இனமுண்டேல், அதுவன்றோ நாத்திகம்! மூட நம்பிக்கையை மறைவாகப் பரப்பிவரும் இனமொன்றுண்டேல், அதுவே நாத்திகம்! இவற்றை யொழிக்க வருவார் யாவரேனும் ஆகுக, உருவ வழிபாடு அவரிடமுண்டோ இல்லையோ, அவர் அனைவரும் ஆத்திகர்; ஆத்திகரே.

'நாத்திகம்' எனக் கருதும் ஒன்று தனியானதன்று; ஆத்திகத்தினின்றும் வேறானதுமன்று. ஆனால், ஆத்திகத்தின் மாற்ற நிலை; ஆத்திகம் அழுகி வெளிப்படும் நாற்றமே நாத்திகம். பழம் இல்லாவிடில், அதன் தன்மை அழுகாவிடில், நாற்றமேது? இனிமையின் அடியில் எழும் சமயத்தில் ஊழலும் மூட நம்பிக்கையும் முதிர முதிர, அதுவே நாத்திக நாற்றமாக மாறுகிறது. 'என்று நீ அன்று நான்' என்றதுபோல, என்று ஆத்திகம் பிறந்ததோ அன்றே நாத்திகமும் அதனில் மறைந்திருந்தது. இதை உலகின் சமய வரலாறுகளும் உரைக்கும்! அழுகிய பழத்தை அப்படியே வைத்துக்கொண்டு, மூக்கையும் கண்ணையும் மூடித் தடுப்பதால நாற்றம் நீங்காது. அழுகியதனை அப்பால் எறியவேண்டும்; மற்றொரு நல்லதை அங்கு வைக்கவேண்டும். அதாவது சமயத்தைத் தத்துவத்தின் (முதல் தோன்றியமாதிரி) அடிப்படையில் மாற்றி யமைக்கவேண்டும். காலத்திற்கேற்பத் திருத்தவேண்டும். உலகச் சமய வளர்ச்சி இதனை உணர்த்தும். பிராடஸ்டண்ட், இஸ்லாம் நெறி, பிரம்ம ஞான, பிரம்ம சமாஜ நெறிகள், புத்தம், அருட்சோதி வழி

பாடு இவை யாவும் ஏன் தோன்றின? ஆத்திகத்தில் தோன்றிய நாற்றத்தை அகற்றவேதான்!

சிலுவைப் போர், இங்கிலாந்தில்—ஐரோப்பாவில்—கத்தோலிய எதிர்ப்பில் நடந்த அரசியல் கொலைகள், மகம்மது நபியைப் பல்லுடைத்தது, கிறித்துவைச் சிலுவையிலடித்தது, இந்தியாவில் நால்வருண வேற்றுமையும், உயிர்க்கொலை வேள்வியும் கொண்டது—இவையெல்லாம் ஆத்திகம் என்ற போர்வையில் நடந்த அட்டூழிய மன்றோ? இவை நாற்ற மன்றோ! இவற்றை எடுத்துரைப்போர்மேலே அந்நாற்ற மடிப்பது இயற்கை. ஆனால், அவர்கள் நாத்திகரல்லர். உலகில் நாத்திகப் பட்டம் பெற்றோர் யாவரும் 'கடவுள் ஒருவர் இல்லை' யெனக் கூறியதே இல்லையெனலாம். இங்கர்சால், வால்டேர், பெர்னட்ஷா, இவரைப் படித்து யானறிந்திதுவே.

'கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக,' என வள்ளலார் உரைத்தார். கடவுளைப் பற்றியே பேசவில்லை புத்தர் பெருமான். டால்ஸ்டாயை விடச் சமய ஊழலை அவ்வளவு அதிகமாக யார்தான் கண்டிக்கமுடியும்? இவர்களை யெல்லாம் நாத்திகரெனலாமா? அவர்தம் வாழ்வெல்லாம் நல்ல அறவாழ்வு! இன்று, மக்கள் நலன்களுக்கு முட்டுக்கட்டையிடுவோரெல்லாம் ஆத்திகர் (என்னும் நாத்திகர்தாம்).

உண்மைச் சமயம் என்றும் நாத்திகத்திற்கு அஞ்சியதே கிடையாது. உலகாயத, பௌத்த மதங்கள் பழையவை. உலகில் அறமழிந்து மறமோங்கிய காலத்தில் தோன்றும் ஆண்டவன், 'நாத்திகனாகவே' தோன்றுகிறானென்பேன்.

துன்பமுள்ளபோது ஆண்டவனை வெறுப்பதும், இன்பத்தில் அவனை எண்ணுவதும் இயற்கை. செறிக்காதபோது சோற்றை வெறுப்பது இயற்கை தானே? எனவே, ஆத்திகமும் நாத்திகமும் நாட்டு வாழ்வில் தோன்றும் இயற்கை எண்ணங்கள்; அவற்றைத் தடுக்கவும் முடியாது.

'இந்திய மக்கட்குச் சோறும் உடையும் இடமும் போதிய அளவு கிடைக்கும்வரைக் கடவுளைப்பற்றியோ, தத்துவங்களைப்பற்றியோ நமக்குக் கவலையில்லை' என அறிவியல் மாநாட்டில் பண்டித நேரு கூறியது முற்றும் உண்மை.

மனித இனம் அறிவில் உயர உயர, அதாவது கடவுள் தன்மையில் பெருகப் பெருக, கடவுளை (உருவத்தை) நினைப்பதும் குறையவே செய்யும். உண்மையில், கம்யூனிஸம் முற்றியபோதோ, டால்ஸ்டாய் 'கடவுள் வானரசு' உலகில் மீண்டும் நிலைக்கும்போதோ, மக்களில் பெரிதும் கடவுள் நினைவற்றே, நாம் கருதும் நாத்திகராகவே யிருப்பர். செல்வம் பரவிய ரஷியரிடத்தும், அறிவு சிறந்த விஞ்ஞானியரிடத்தும் இன்றே அதனைக் காண்கிறோம்; மனிதன், கடவுள் தன்மையை அடைய அடைய, வேறு கடவுள் நினைவை மறக்கிறான். உலகச் சமயப் பெரியாரும் இதனை ஒப்பியுள்ளனர். அது இனி, பெரிதும் உலகமுழுதும் எல்லோர்க்கும் அடையும் நிலையாகலாம்.

இதனால் நான் உருவ வழிபாட்டை மறுக்கிறேன் என்பதில்லை. ஆராய்ந்தமட்டில், அதனைக் கடவுள் தன்மையடைய ஒரு 'கட்டளை'யாகக்' கொள்ளவில்லை; ஆனால், இரண்டில் ஒரு நெறியாகக் கொள்கிறேன். மற்றொன்று

அறிவு நெறி (ஞான நெறி). அதாவது, உருவ வணக்கத்தைக் கருதாத காரணத்தால் நாத்திகப்பட்டம் பெறுவோர் (அறியாமலே) பற்றும் நெறி. ஆனால் இவர்கள் பெர்னட்ஷா கூறுகிறபடி இரத்தமும் எலும்புங்கொண்ட உருவத்தை வழிபடுகிறார்கள். புத்தம், கிறித்தவம், இஸ்லாமியமும் கூட சமயத்தலைவரையே வழிபடுகின்றன.

பற்றுக்கோடு கொண்டு வளரும் கொடிபோன்றது ஆத்திகம். தானே வளரும் செடிபோன்றது நாத்திகம். ஆனால், அறிவும் துணிவுமின்றி நாத்திகராக முடியாது. ஆகவேதான் உலகில் என்றும் நாத்திகம் சிறுபான்மையாகவே இருந்திருக்கிறது; ஆனால் என்றும் இல்லாமல் இருந்ததுமில்லை.

பிள்ளைப் பருவத்திலேயே திணிக்கப்பட்டு வெறும் நம்பிகையால் 'கடவுள் உண்டு' என்பதைவிட, படித்து, நினைத்து, புரிந்து, அறிவால் கடவுள் நினைவை வளர்ப்பதே உண்மையான வளர்ச்சி; ஆத்திகம். விவேகானந்தர் வாழ்வு அப்படியே வளர்ந்தது. அறிஞர் நியூமன் கண்ட பல்கலைக் கழக மாணவராக (Ideal of a University) இளைஞர் ஆகவேண்டும். இன்று நாட்டில், உயர்நிலைக் கழக, கல்லூரி மாணவர் யாவரும் இத் தகுதி யடையக்கூடிய பொது அறிவுடையராய்விட்டனர். இனித் திணித்து நம்ப வைக்கமுடியாது. ஆனால் கெட்டகாலமாக, பள்ளிகளில் இன்று நாத்திக ஆத்திகப் போராட்டம் நடக்கிறது. இதற்கிடையில், மாணவர் அல்லற்படுகின்றனர். ஆசிரியர் நாத்திகம் பரப்புவதாக அறைகூவல். பரப்பும் பொருளா அது? விந்தை! அப்படியானால், சிலகாலம் (10 ஆண்டு) சமயம்

பற்றிய மேலே சொன்ன நாத்திக நாற்றமுடைய ஆத்திகப் பகுதிகளைப் பாடமாக வைக்கவேண்டாம். தவிர்க்கமுடியாது கலக்குமிடங்களில், ஆசிரியர் 'கற்பிக்கும் முறையை' வரையறுக்கலாம். வேண்டாதவிடத்துப் பிரசாரமாகப் பேசினல் அதைக் கட்டாயம் தடுக்கலாம்.

பொதுச்சமயம், ஒரு கடவுள் வருணனை, நீதி, அறப் பகுதி, புறநானூறு போன்ற பாடல் இவற்றைப் பொறுக்கிக் கொள்ளலாம்.

மனிதன், சமயம் இல்லாமலும், உருவ வழிபாடின்றியும் உண்மையான ஆத்திகனுக, அதாவது உயர் மனிதத் தன்மையும் (கடவுள் தன்மை) அறவாழ்வும், உடையோனுக, முடியும். அவனே சிறந்தவன். இது ஹியூமனின் கொள்கை. அறவாழ்வுடைய மனிதராய் வருங்கால மக்கள் வாழவேண்டும். இதுவே நம் குறிக்கோள். இப்போதே வெளியான இந்திய சோஷலிஸ்டுகள் தீர்மானத்தில் 'வரும் இந்தியக் கூட்டரசில் நாத்திகர்க்கும் இடமிருக்கவேண்டும்' என்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வாழ்க பொன்னாடு

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பர்மா உரிமைபெற்று வாழ்கிறது. "பொன் நாடு" என நம் முன்னோர் அந்த நாட்டினைப் போற்றிவந்தனர். வெள்ளானை அங்கு வழங்கியது அந்தப் பெயரை நிலை நாட்டியதுபோலும்! இன்றும் பொன் கொழிக்கும் நாடாக ஓங்கி வளர வாய்ப்புகள் உண்டு. அந்த வாய்ப்புகள் வழியே அந் நாட்டு மக்கள் சிறந்தோங்கி உலகிற்கு வழிகாட்டி வாழ்வார்களாக. இயற்கைச் செல்வமும் மக்களின் அறிவுச் செல்வமும் இன்று பெற்ற உரிமைச் செல்வத்தால் ஈடும் எடுப்புமின்றி வளர இடம் உண்டு.

கிழக்கேதான் கதிரவன் தோன்றுகிறான். முதலில் அறிவுக்கதிரவன் இன்பவளம் கொழித்து நாகரிகப் பேரொளியை வீசியதும் கீழ் நாடுகளில்தான். புத்தர் பெருமானை ஆசிய நாட்டு அருஞ்சுடர் என உலகம் இன்றும் வாழ்த்துகின்றது. அந்த அருஞ்சுடர் வழியே கீழைநாடுகள் ஒற்றுமை பெற்று விளங்குகின்றன. இத்தனை நாள்களாக இந்த ஆசியப் பேரொளி வறுமை இருளில் மழுங்கிக் கிடந்தது. இன்று உரிமைக் கதிரவனோடு இந்த நாடுகளில் பொழுது விடிகிறது. இந்திய நாடு ஒருவகையில் இந்தப் பேரொளிக்குத் தாயகமாதலின் கீழைநாடுகள் உலகை முன்னணியில் நிற்பது கண்டு, நம் தாய் பெருமகிழ்ச்சி கொள்

வதில் வியப்பொன்றும் இல்லை. மண்ணையே நம்பி அணுக்குண்டெறிந்து மண்ணோடுமண்ணாய்ப் போவதா? மக்களை நம்பி அவர்கள் வாழ்வினைப் பெருக்கி அணுவினையும் இத்தொண்டில் பயன்படுத்தி உலகினை இன்பத்துள் ஆழ்த்துவதா? ஈதே கேள்வி. மேனாட்டு நாகரிகம் அணுக்குண்டில் முடிந்துள்ளது. கீழ்நாடோ அன்போடு அறிவு வழியே மக்கட்குத் தொண்டு செய்வதனையே அருளறம் எனப் புத்தர் பெருமானார் நாள் முதல் கொண்டாடி வந்துள்ளது. புத்தர் பேரொளி இந்தியப் பேரொளியில் இணைந்துவிட்டதால் வேறாகத் தோன்றவில்லை. எனினும் இன்றும் இந்தியப் பெருமகனாராம் காந்தியடிகள் அந்த அருளறத்தினையன்றோ இந்தியப் பேரறம் என வற்புறுத்துகின்றார்? இலங்கை, பர்மா, சீனா முதலிய கீழ்நாடுகளில் புத்தப் பேரொளி தனி வீறுடன் தழைத்தோங்குகிறது. இந்தப் பேரொளி வாழ்ந்தால்மட்டுமே போரிடையே சிக்கிப் புழுங்கும் உலகம் உய்ய இடமுண்டு.

புத்தர் பெருமான் பேரறிவுபெற்று நின்றது அரச மரத்தின் அடியில்தான். அன்றுமுதல் அரசமரம் போதி மரமாகிப் புகழ்பெற்றுப் புத்தப் பேரொளியின் பசுமை பூத்த அருள் அடையாளமாக விளங்குகிறது. இங்கு, அரச மரத்தினைச் சுற்றிவரும் வழக்கம் இன்றும் மறையவில்லை. இந்திய நாடு அரசிளங்கிளையைப் பர்மாவில் இந்தியப் பேரொளியின் அன்பளிப்பாக நிலைநாட்ட இராசேந்திரர் கொண்டு சென்றார். இதனிலும் சிறந்த அன்பளிப்பு இருக்க முடியாதெனப் பர்மியரும் வரவேற்று வாழ்த்தி வணங்கினர். பர்மியப் புது வாழ்வின் மேன்மையோடு இந்த அரசு தழைத்

தோங்கிச் செழித்து உலகமெங்கும் தண்ணிழல் தந்து ஒளிர்வதாக.

புத்தப் பேரொளி வட இந்தியாவில் தோன்றியதே ஆயினும் நாகானந்தர், திங்நாகர் முதலியோரது ஆராய்ச்சியின் பயனாகத் தென்னாட்டில் சிறந்து வளர்ந்தது. தமிழ் நாட்டுப் புத்தப் பெருவாழ்வின் சிறப்பினை மணிமேகலையில் இன்றும் ஓதி உணர்ந்து மகிழலாம். பர்மிய நாட்டுப் புத்தப் பேரொளியோடு தமிழர் வாழ்வு பிணைந்து கிடக்கிறது என்று கூறலாம்.

அருள் வாழ்க்கையின் தொடர்பு, பொருள் வாழ்க்கையிலும் பிணைந்துள்ளது. தமிழர் "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?" என்று கூறித் திரிந்தவர் அல்லர். எழுதக் கற்கும்போதே, "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று கற்றுவந்தவர். தமிழ் நாட்டின் முப்புறத்தும் கடல் சூழ்ந்து கிடந்தமையால், கடலன்னையின் மடிமீதும் தமிழர் தவழ்ந்து விளையாடினர். கீழைக்கடல் அவர்களுக்குப் புதியதாகத் தோண்டிய கால்வாய்போன்றே தோன்றியது. இந்தக் கரையில் தமிழ் நாடு; அந்தக் கரையில் பர்மா என்னும் பொன்னாடு. இந்தக் கீழைக்கடலில் கப்பலில் செல்லுவாரைக் காக்கும் தெய்வத்திற்கே மணிமேகலை என்று பெயர். இக் கப்பற் புழக்கம் அன்றுடைய வாழ்வானமையால் அன்றோ மணிமேகலை என்ற பெயர் தமிழர் நாவிற் பழகுவதாயிற்று? மணிமேகலைக் காப்பியத்தில் வரும் சாதுவன் வரலாற்றால் தமிழர்கள் கீழைநாட்டுப் பெயர்

களைக் கற்றுத் தேர்ந்திருந்தமை நன்றாக விளங்குகிறது. பல பல வணிகக் கூட்டங்கள் பல நாடுகளிலும் சென்று வாணிபம் செய்துவந்தமை பழங்கதை அன்று. இன்றும் பர்மாவில் நகரத்தார் பெரு வாணிபம் செய்துவருவதனைக் கூறவேண்டுமா ?

ஈழை நாடுகளை நம் பல்லவர்களும் சோழர்களும் கப்பற் படை கொண்டு ஆண்ட வரலாறும் இன்று உலகறிந்ததே யாம். தமிழ்க் கல்வெட்டுகள் அங்கு அந்தப் பழைய வரலாற்றை உண்மை என முழங்கி வருகின்றன. அன்றொரு சோழ இராசேந்திரர் தமிழ் நாட்டிலிருந்து சென்று வெற்றிக் கொடி பறக்கவிட்டார். இன்றொரு இராசேந்திரர் இந்திய நாட்டிலிருந்து பர்மா சென்று அன்புக்கொடி பறக்கவிட்டு அரசின் கிளையை நாட்டி வந்துள்ளார். பழைய நம் செல்வ வாழ்விற்கும் புதிய நம் செல்வ வாழ்விற்கும் உள்ள வேற்றுமை இங்குப் புலனாகிறது. பிறரை ஆளும் கொள்கை இன்று கனவிலும நமக்கு இல்லை. உலகம் முழுதும் உரிமை செழிக்க வேண்டும் என்பதே நமது முயற்சி. பிறரைச் சுரண்டி வாழும் வாழ்வும இனி இல்லை. தமிழ் வாணிபம் செய்வோர் இதனை மறத்தலாகாது. ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒரு கால் என வாழ்ந்து பயனில்லை. அவரும் சுரண்டிக்கொண்டு வந்து இங்குக் கொட்டுவது என்பது இனி நம் வாழ்க்கையின் நோக்கமாகாது. பர்மாவில் வாழ்வு வேண்டும் என்றால் பர்மியரோடு பர்மியராய் வாழ்ந்து அந்தப் பண்பாட்டினை வாழ வைக்கவேண்டும். இந்தியராக வாழ விரும்புவோர் நடுநிலைமையாகப் பர்மியரோடு பழகவேண்டும். பர்மாவில் சென்று அலுவல் பல பார்த்தும் தொழில்கள் பல புரிந்தும் வாணிபத்துறையில் உதவியும இன்றுள்ள சிறந்த நிலைக்கும்

பர்மாவைக் கொண்டுவந்தோர் தமிழரே ஆம். இதனைப் பர்மியர் உணருவர். ஆனால், நாமும் சுரண்டற் கொள்கையை மறந்துவிடுதல் வேண்டும்.

வெள்ளானை மறைந்தது. ஐராவதி இன்றும் பெருக்கெடுத்து ஓடுகின்றாள். தேக்குமுதலாம் மரங்கள் நிறைந்த காடுகள் கற்பகப் பொழிலாய்ச் செல்வம் கொழிக்கின்றன. நெல்லை பொன்னாய் விளையும் வயல்கள் வளம் பெருகுகின்றன. தண்ணீர்த் திருவிழாவோடு தவறாது மழை பொழியும் இயற்கை வளமும் உண்டு. பலநிற உடையில் அழகுபெற ஒளிரும் கலை மேம்பாடும் உண்டு. வாழ்வினை இன்பமாகக் கொள்ளும் மனப்பான்மையும் உண்டு. அங்கே பெண்களின் சிறப்பால் பெருவாழ்வு வாழும் இல்லறப் பேரொளி எங்கும் உண்டு. தரைவரை நீளும் கூந்தலோடு நடந்துவரும் அழகிய மங்கையரின் அன்பும் உண்டு. புத்தப் பள்ளிகளின் அருள் ஒளி எங்கும் உண்டு. போரிடை புழுங்கிப் புடம் போட்ட ஆயிரமாற்றுப் பொன்னாக வாழ்கிறது பொன்னாடு. புத்துயிரும் புத்துணர்ச்சியும் உரிமை வடிவோடு அங்குக் காட்சி அளிக்கின்றன. என்ன குறை? வாழ்க பர்மியர்! வாழ்க பொன்னாடு!

அந்த நாள்

மு. வரதராசனார்

"பொன்முடி! இப்படி எத்தனை நாளைக்கு வாழ்வது? நாம் படுவது வாணியும் படவேண்டுமா?; அவளாவது கவலை இல்லாமல் அம்மான் வீட்டில் இருக்கக்கூடாதா? நம்முடைய சொந்த ஊரில் எத்தனை நாள் எவ்வளவு விமானங்கள் பறந்தாலும் கவலை இருக்காதே! இந்த ஊரில்—உற்றார் உறவினர் இல்லாத இடத்தில் இப்படி ஆபத்துக்கு ஆளாவதா? குடும்பத்தோடு அழிந்து போகும்படி குண்டு விழுந்தால் ஒரே கவலையாய்ப் போகும்—கவலையே இல்லாமல் போகும். ஆனால், பகலில் நான் கம்பெனியில் இருக்கும் போது அன்றைக்கு வந்தாற்போல் எதிரி வந்தால் என்ன செய்வேன்? கம்பெனியில் எல்லாரும் இருந்தும் என் நெஞ்சம் நடுங்கிக் குலைகின்றதே! நான் கம்பெனியில் இருக்கும் போது, உங்களுக்கு ஆபத்து நேர்ந்தால் எப்படி மறுபடியும் வந்து பார்ப்பேன்?" என்று சொல்லி விட்டு மேலே பேச முடியாமல் நின்றேன்.

"அப்படியானால், நீயும் புறப்படு என்றுதானே சொல்கிறேன். எல்லாரும் போய் எங்கேயாவது ஒன்றாக இருந்து மடியலாம்" என்றாள்.

நான் பதில் பேசாமல் இருந்தேன்.

"...அல்லது, வாணியை மட்டுமாவது அனுப்பி விடலாம். அவள் உயிரோடு தாய்நாட்டுக்குப் போய்ச் சேரட்டும். நாம் இரண்டு பேரும் எந்தக் கதியாவது அடையலாம்" என்றாள்.

நான் அதற்கும் பதில் பேசாமல் இருந்தேன்.

"வாணி? தூங்கிவிட்டாயா?" என்று அவள் வாணியைக் கேட்டாள்.

"இல்லையம்மா! தூக்கம் வரவில்லை" என்று அவள் அழுது கொண்டே சொன்னாள்.

"நீ ஏன் வாணி அழுகிறாய்?" என்று அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டு வருந்தினேன்.

"என்னால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் இங்கே இருக்கிற வரைக்கும் உங்களோடு நானும் இருப்பேன். இல்லையானால் எல்லாரும் புறப்பட்டுப் போகலாம். நான் மட்டும் தனியாக இருக்கமாட்டேன்" என்று தழுதழுத்த குரலில் வாணி சொன்னாள்.

அமைதிச் சங்கு ஒலித்தது. எல்லாரும் நடுக்கமும் கவலையும் நீங்கிக் கலகல என்று பேசினார்கள். மின்சாரப் பொத்தானைத் தட்டினேன் ஒளி வந்தது. பொன்முடியின் முகத்தையும் வாணியின் முகத்தையும் கண்டேன். அவர்களும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து என்முகத்தையும் பார்த்தார்கள். அழுது அழுது சிவந்த கண்களும் ஊதலாய் மாறிய முகங்களும் கண்டு "இதுவோ குடும்பம்!" என்று நொந்தேன். வாணி கவிழ்ந்து படுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள். மனைவி முகத்தை அந்தப் புறமாகத் திருப்பிக் கொண்டாள். ஒளி கண்டதும் எங்கள் துயரத்தில் முக்கால் பங்கு திடீரெனக் குறைந்து விட்டது. துன்பம், நடுக்கம், பயம் இவைகளுக் கெல்லாம் இருள் துணை செய்வதாக இருக்கின்றது. இவைகளின் ஆற்றலைக் குறைப்பதற்கு ஒளி பெரு மருந்தாக இருக்கிறது. இருள் நம் பகை! ஒளி நம் நட்பு! விமானப் படை யெடுப்பின் வாயிலாக அரசாங்கப் பகைவன் நெருங்கும் போது இருள் என்னும் பகைவனை வலிய வருவித்து ஆட்சி தருகின்றார்கள் இந்த ஏ. ஆர். பி. தொண்டர்கள்.

நாற்காலியை விட்டு மெல்ல எழுந்தேன். சன்னலைத் திறந்து எட்டிப் பார்த்தேன். தொண்டர்கள் நடமாட்டம் கண்டேன். அவர்கள் பேசும் பேச்சைக் கேட்கவில்லை. அபாயம் என்பதன் அறிகுறியாக, போக்குவரத்து வண்டிகளைத் தடுக்க வேண்டிச் சிவப்பு விளக்கு ஒன்று எங்கள் வீட்டை அடுத்தாற்போல் வைத்துக் கொண்டிருந்தார்கள். கீழே இறங்கிச் செல்லப் புறப்பட்டேன்.

"எங்கே புறப்பட்டீர்கள்?" என்று மனைவி தடுத்தாள். "எந்த வீடு இடிந்தது என்று போய்ப் பார்ப்பதற்காக" என்றேன். "காலையில் பார்க்கலாம்" என்றாள். "ஒரு வேளை நம் வீடாகவே இருந்தால்—" என்றேன். அப்படி இருந்தால் "கூண்டோடு கைலாயம். எவ்வளவோ நல்ல முடிவாயிற்றே" என்றாள்.

திரும்பி வந்து படுக்கையில் படுத்தேன். நெடு நேரம் பேச்சில்லை. தெருவிலும் தொண்டர்கள் பேச்சும் நடையும் அடங்கி விட்டன. வீட்டினுள்ளும் அமைதி நிலவிற்று.

"தூங்கி விட்டாயா?" என்றேன்.

"இன்னும் இல்லை" என்றாள்.

"என்ன யோசனை"

"சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் வேலையை விட்டு விடுங்கள்."

"அப்புறம்"

"பிச்சை எடுத்து வயிறு வளர்க்கலாம்."

"வேலைக்குக் காப்பியும் பிச்சை கொடுப்பார்களா?"

"அதுவும் கிடைத்தாலும் கிடைக்கும்"

"வாணியைச் செல்வக் குழந்தையாக வளர்ப்பதற்கும் பிச்சை கிடைக்குமா?"

"அவள் ஏழை வீட்டுப் பெண்ணாகத்தான் வளரட்டுமே! அறிவு வளர்வதற்குப் பணம் வேண்டுமா?"

"மாதம் ஏழெட்டு ரூபாய்க்குத் தமிழ்ப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்கி அவளுக்குக் கொடுப்பவர் யார்?"

சிறிது நேரம் பதில் இல்லை. ஒரு பெருமூச்சு மட்டும் வந்தது. கீழ் அடுக்கில் இருப்பவர் யாரோ பெருத்த கொட்டாவி விட்டார். ஒரு நாய் குரைக்கத் தொடங்கியது. முழுதும் குரைக்காமல் அடங்கியது அதற்குப் பதிலுக்குக் குரைத்து ஊக்கம் கொடுக்கும் நாய் இல்லை என்று தெரிந்தது. இப்படியே, எதிர்க்கும் நாடு இல்லாதிருந்தால், போருக்கு எழுகின்ற நாடும் அடங்குமே என எண்ணினேன். பக்கத்து வீட்டில் சன்னல் பக்கம் படுத்துக் கொண்டு வல்லமையாக குறட்டை விட்டுக் கொண்டு ஒருவர் தூங்குவது வழக்கம். அந்த ஒலி நள்ளிரவில் மோர் கடைவது போல் கேட்டுக் கொண்டிருக்கும். அவரும் தமிழ் நாட்டவரே. அவர் ஊருக்குப் போக வேண்டுமென்று எப்படியோ முன்னேற்பாடு செய்து கடையைச் சுருட்டிக் கொண்டு கப்பல் கிடைக்கும் போதே போய் விட்டார். அந்த வீட்டில் அந்தப் பகுதி காலியாக கிடந்தது. எதிர் வீட்டில் பெரிய செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் கல்லூரியில் படிப்பவன். அவன் நாள்தோறும் இரவில் பத்து மணிக்கு மேல் தேநீர் குடித்து விட்டு நெடு நேரம் படித்துக் கொண்டிருப்பான். ஒவ்வோர் இரவிலும் ஏதாவது ஒரு நாவலில் நூறு பக்கமாவது படிக்காமல், அவன் தூங்குவதே இல்லையாம். ஆனால், அவனுடைய தகப்பனார் இரவு ஒன்பது மணிக்கே படுத்துக் கொண்டு நள்ளிரவில் ஒன்று அல்லது இரண்டு மணிக்கே

விழித்துக் கொண்டு நடை பழக்கிக் கொண்டிருப்பார். ஆகவே, மகன் படுக்கப் போனவுடனே தகப்பனுர் விழித்துக் கொண்டு கடமையைத் தொடங்குவார். அதனுல் எதிர் வீட்டிலிருந்த எங்களுக்குப் பெருந் தொல்லையாக இருக்கும். அந்த எதிர் வீட்டாரும் வீட்டைப் பூட்டி விட்டு வேலைக்காரனி டம் சாவியைக் கொடுத்து விட்டு, ஐநூறு ரூபாய் லஞ்சம் கொடுத்துக் கடைசி கப்பலில் எப்படியோ இடம் தேடிப் பெற்றுப் போய் விட்டார்கள். எங்கள் வீட்டிலும் நாள் தோறும் சினிமாவுக்குப் போய்க் கடைசி ஆட்டம் பார்த்து விட்டுப் பன்னிரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டும் பேர் பு...கள் இரண்டு பேர் குடியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் போய் விட்டார். இன்னெருவர் "பாழாய்ப் போன சண்டை வந்தது. கடைசியான மூன்றும் காட்சியை நிறுத்தி விட்டார் கள். சாயங்காலம் ஆறு மணிக்கே சினிமாவுக்குப் போய்ப் பார்த்து விட்டு ஒன்பது மணிக்கு வீடு திரும்ப வேண்டுமாம். என்ன அநியாயம் இந்தச் சர்க்கார் செய்வது!" என்று காரண மில்லாமல் சர்க்காரைத் திட்டிக் கொண்டிருக்கிருர். அவர் ஒரு மணிக்கு முன் தூங்கிப் பழகாததால் இப்போது தூக்கமே பிடிக்க வில்லை என்று எந்நேரமும் கனைத்துக் கொண் டிருக்கிருர். இன்னெருவர் காச நோயாளி இருந்தார். அவர் அடிக்கடி இரவில் நோய்த் தொல்லைப்பட்டு "ஹா ஹீ—அம் மாடா, அப்பாடா" என்று பெருந் துன்பப்பட்டுக் கொண் டிருப்பார். அவர் 'எப்படிப் போவது? என் உடம்புக்குப் பயணம் ஒத்துக்கொள்ளாதே! நோய் அதிகமாகப் போய் விடுமே! போகிற வழியில் நோய் வந்து விட்டால் செத்துப் போவேனே!" என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருந்தார். பாவம்! அந்த மனிதரும் புறப்பட்டுப் போய் ஐந்து நாள் ஆயின. அவர்க்குக் கப்பல் கிடைத்த காலத்தில் போக மன மில்லை. கடைசியில் காலால் நடந்து போகத் துணிந்து போய் விட்டார். கால் மைல் தொலைவு நடந்து போக வேண்டுமானுல் பெருமூச்சு இழுத்து வேதனைப்படுகிறவர் நூற்றுக்கணக்கான மைல் நடந்து போய்ச் சேர முடியுமா? எனக்கு எள்ளளவும்

நம்பிக்கை இல்லை. அவர் குண்டுக்குத் தப்பிப்போய் வழியில் திக்கற்ற பிணமாய் விடுவார். நினைத்தாலும் வருத்தமாக இருக்கிறது. இவற்றைவிடப் பெரிய துன்பம் இது! அந்தப் பழைய வேலைக்காரி எப்படியோ போகத் துணிந்து புறப்பட்டு விட்டாள். கப்பலில் போகக் காசு இல்லாமல் கலங்கினாள். கடைசியில் இரண்டு முறை விமானப் படை எடுப்பைக் கண்டதும் நடந்து போகத் துணிந்தாள்! போய் விட்டாள்! ஒன்பது மாத கருப்பம் நிறைந்தவள்—நிறைந்த பிள்ளைத்தாய்ச்சி சொன்னாலும் கேட்காமல் போய் விட்டாள். சொல்லித் தடுக்கவும் வழி யில்லை. என்ன என்று சொல்வது? இப்படியெல்லாம் எண்ணிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த போது அவள் பேசத் தொடங்கினாள்.

"வேலையை விட்டு விடுங்கள்" என்றாள்.

"இன்றைக்கு காலையிலேயே விட்டுவிடத் துணிவேன். அப்புறம் பிழைப்பது எப்படி? இத்தனைக் காலமாய் 150 ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தவர்கள் இப்போது எதிர் பாராதவாறு 300 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள்" என்றேன்.

"ஆபத்து காலத்தில் ஆசை ஊட்டுகிறார்கள். இது நல்லெண்ணத்தால் செய்வது அல்ல."

"உண்மைதான். இருந்தாலும் இதை விட்டால் 30 ரூபாய்க்கு வழி இல்லையே. தவிர, ஆபத்துக் காலத்தில் நம்பினவர்களைக் கைவிடலாமா?"

"நீதான் இப்படி அரிச்சந்திரனாக இருக்கிறாய். போன வாரத்தில் நாலைந்து பேர் சொல்லாமல் விட்டு விட்டுப் போனார்களே, நீதானே சொன்னாய்"

"அதனால்தான் இப்போது கம்பெனி கல்கலத்து நெருக்கடியாக இருக்கிறது. இந்த வேளையில் நானும் விட்டு

தமிழுணர்ந்த மகாத்மா

'ஞானம்'

காந்தியடிகள் பிறப்பால், பேசும் மொழியால் குஜ ராத்தியாவர். அம்மொழியில் அவருக்கு அதிகப் பற்றுண்டு. தமது சுய சரிதத்தை குஜராத்தியில் எழுதியதே இதற்குச் சான்று. ஆனால், மாகாண மொழிகளில் அவர் தம் தாய் மொழிக்கு அடுத்தபடியாக தமிழ மொழியையே விரும்பினர். சமஸ்கிருதத் தொடர்புடைய பிற இந்திய மொழிகளினின் றும் முற்றிலும் வேறுபட்டு தனித்தியங்கும் தமிழ் மொழியை குஜராத்தியாகிய காந்தியடிகள் கற்பதென்பது எளிதான காரியமல்ல. அப்படி இருந்தும் அவர் தென்னப்பிரிக்காவில் வாழ்ந்தபோது தமிழை வருந்திக் கற்றார். தென்னப்பிரிக்கத் தமிழர்களுக்கு, தமிழ் கற்பிக்க ஆசிரியர் இல்லாத குறையை அடிகள் பூர்த்தி செய்தார். தாமே ஆசிரியராக இருந்து தமக்குத் தெரிந்த சொற்ப எழுத்தறிவைப் போதித்தார். அடிகளார் ஏதோ தமிழரிடம் பேசிப் பழகுவதற்காகமட்டும் தமிழ் கற்க விரும்பினரில்லை. தமிழ் இலக்கியத்தை, தமிழ் மொழியின்மூலமே சுவைக்க ஆவல்கொண்டு தமிழ் கற்கத் துணிந்தார்.

> யான் தமிழ்பயிலத் தொடங்கியதற்குக் கார ணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த அவாவேயாகும்.
>
> கா.

என்று அடிகள் 1927ல் தமது தூத்துக்குடிச் சொற்பொழிவு ஒன்றில் வெளியிட்டார். ஆனல், அவர்மேல் சுமந்துவிட்ட அரசியல் பொறுப்பு காரணமாக அவரது தமிழ்க் கல்வி முற்றுப்பெறுமல் இடையே முறிந்துவிட்டது.

> தமிழ் மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினரில்லை. அது குறித்து எனக்குள்ள வருத்தம் அளவற்றது.

என்று தமது தமிழ்க்கல்வி தடைப்பட்டமைக்கு வருந்தினர். தமிழின் ஆழத்தைக் காணுவதில் அடிகளார் வெற்றிபெரு விடினும் அதன் அருமை பெருமைகளை அவர் நன்கு உணர்ந் திருந்தார்.

> தமிழ் மொழி பயிலப் பயில அதன் அழகு உணரலானேன் அஃதொரு மனங்கவரும் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலிருந்து இந்நாளிலும்கூட பல அறிஞர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பது அம் மொழியின் அமைப் பாலும் அப் பயிற்சியாலும் அறியக் கிடக்கிறது.

இதை வாய்மை தவருத அண்ணல் தமிழுக்குக் கூறிய வாழ்த்துரையாகவே கொள்ளலாம்.

இந்தியர் அனைவரும் ஒரே இனம்; இந்தியா முழுவதும் ஒரே நாடு; என்ற ஒற்றுமைக் கோஷங்களை எழுப்பியவர், அவற்றை நாள்தோறும் வலியுறுத்தியவர் காந்தியடிகளே ஆவர். ஆனல், அவர் கூறும் ஒற்றுமை, அன்பின் அடிப் படையில் எழுந்ததேயொழிய, ஆதிக்கம் செலுத்தும் புத் தியாலன்று. 'தமிழ் மக்கள் எனது ரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர்போல் தோன்றுகிருர்கள்.'' என்பதை எத்த னையோ முறைகளில் காந்தியடிகள் கூறியிருக்கிருர். அவர் தமிழ் மக்கள்மீது அன்பு செலுத்தவும் தமிழ் மொழியைப் பயிலவும் காரணமென்ன? இதை அவரே கூறக் கேளுங்கள்.

> 'தென்னப்பிரிக்கப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணைபோல வேறு எந்த இந்தியரும் புரிய வில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர் கள் நூல்களைப் பயிலவேண்டுமென்று நினைத் தேன்.'

இது அடிகளார் தமிழினத்தின்மீது வைத்த அன்பைக் குறிக்கவில்லையா?

'இந்தியாவுக்கு ஒரே மொழி வேண்டும்; அம் மொழி இந்துஸ்தானியாகவே இருக்கவேண்டும்' என்பது காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் வற்புறுத்திய கொள்கை. ஆனால், வட இந்தியர் தமிழ்மொழியை அன்னிய மொழியாகக் கருதி அலட்சியப்படுத்தும்வரை தமது எண்ணம் கைகூடாதென்பதை அடிகள் உணர்ந்திருந்தார்.

> 'இந்தியாவில் ஓர் இனம் ஏற்படவேண்டுமானால், சென்னை மாகாணத்திற்கு அப்புறம் உள்ளவர்களும் தமிழைக் கற்கவேண்டும்.'

என்று எச்சரித்ததை வட இந்திய அரசியல் வாதிகள் உணர்ந்திருந்தால் பொது மொழி பற்றிய சண்டை எப்பொழுதோ தொலைந்திருக்கும்.

காந்தியடிகள் இந்தியர் அனைவரையும் ஒரே குடும்பமாகக் கருதினலும் அந்த ஒருமைக்குள் அடங்கியுள்ள பன்மையையும் அவர் மறந்துவிடவில்லை. மொழிவாரி இனங்களும், அந்த இனங்களுக்குரிய நாடுகளும் தனித்தியங்கும் தன்மையுடையன என்பதை உணர்ந்தே மொழிவழி மாகாணங்களைப் பிரிக்குமாறு காங்கிரசை வற்புறுத்தினர். 'மொழிவழி மாகாணப் பிரிவினையை காங்கிரஸ் அமைப்பில் புகுத்தியதற்கு நானே பொறுப்பாளி' என்று சில வாரங்களுக்கு முன்னர்கூட அடிகளார் தமது பிரார்த்தனைப் பேச்சில் குறிப்பிட்டார். மொழி வழி மாகாணப் பிரிவினையைப்பற்றி 25-1-48 பிரார்த்தனைப் பேச்சில் பின்வருமாறு கூறினர்:

> 'மொழி வழி மாகாணப் பிரிவினை நாட்டின் கலைவளர்ச்சிக்கு ஏற்றது; மொழிவளர்ச்சிக்கும் அது அவசியமே. மற்றும் கல்வி, வாணிபம் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் அது வழி செய்யும். ஆனல், சுய ஆட்சி என்பதற்கு தனித்தனியாகப்

பிரிந்து செல்வது என்பது அர்த்தமல்ல. அப்படிச் செய்தால் இந்தியாவின் சுதந்திரத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும்.

மொழி வழி நாடுகளுக்கு உரிமை வழங்குவதன்மூலம் பூகோள வழிப்பட்ட இந்தியாவின் ஐக்கியம் சிதையக்கூடாதென்பதே மாகாணப் பிரிவினைக்கு அடிகள் விதித்த நிபந்தனை. இதை மறுப்பார் யார்?

'எந்த மாகாணமாயினும், பிறருக்கு கட்டுப்படாமல் சுதந்திரமாக இருக்க விரும்பினால் அது அந்த லட்சியத்தை மன உறுதியுடன் கடைப்பிடித்து நிற்க வேண்டும். அப்படி நின்றால் நிச்சயம் சுதந்திரம் அடையும்.

பிரிக்கப்படும் மாகாணங்கள் சுய நிர்ணயம்பெற உரிமையுண்டு என்பதும் காந்தியடிகளின் கருத்து.

சுய நிர்ணயம்பெற்ற மாகாணங்கள் எத்தகைய அரசியலை வகுத்துக்கொள்ள வேண்டுமென்ற கேள்விக்கு காந்தியடிகள் தந்த பதில்:

'இந்தியா முழுவதற்கும் எந்தவிதமான பரிபூரண சுயேச்சை அரசியல் வகுக்கப்படுமோ அது போன்ற அரசியல்தான். பரிபூரண சுயேச்சைக்கு நான் கூறும் இலக்கணப்படிப் பார்த்தால் அதில் தவறு ஒன்றும் கிடையாது.'

காந்தியடிகள் கூறும் வழியில் உரிமைபெற்ற ஒவ்வொரு மாகாணமும் இந்திய சமுதாயத்துடன் உறவுகொண்டே இருக்குமென்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது.

சோஷியலிசம் பெற வழி

பிரதமர்

ம. பொ. சி.

19-1-1948ல் கோவை அரசியல் மாநாட்டில் 'இந்தியாவை சோஷியலிச நாடாகச் செய்ய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி திட்டம் வகுக்க வேண்டும்' என்ற தீர்மானத்தின் மீது திரு. ம. பொ. சி. பேசியதாவது :-

"இந்தியாவை சோஷியலிச நாடாகச் செய்ய வேண்டுமென்ற ஆவலை இத் தீர்மானம் வெளியிடுகிறது. பெருஞ் செல்வந்தரான அமைச்சர் அவினாசிலிங்கம் தீர்மானத்தை வெகு உற்சாகத்துடன் ஆமோதித்தார். இதனால் தீர்மானத்தையே நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. (கை தட்டல்) பணக்காரராக இருப்பதால் அவர் இத்தீர்மானத்தை ஆதரிக்கவே கூடாது என்பது என் கருத்தல்ல. அவரது ஆதரவு தேய்பிறையாகக் குறுகாமல் வளர்பிறையாகப் பெருகுமானால்—தனிவுடைமையைக் கைவிட்டு சோஷியலிச அணிவகுப்பில் அவர் கலப்பாரானால் எனது ஐயம் அகலும்; ஆனந்தம் பெருகும். திரு. அவினாசிலிங்கம் கோவை முதலாளிகள் சார்பாக ஆதரித்திருக்கமாட்டார்; அமைச்சர் குழுவின் சார்பாகத்தான் வரவேற்றிருப்பார் (பெருத்த கைதட்டல்). எனவே இத் தீர்மானத்தை அமுல் நடத்த அவரது அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது.

'ஜனநாயக சோஷலிசம் வேண்டும்' என்று கோஷமிடுவதோடு தீர்மானம் திருப்தி யடைந்துவிடுகிறது. இது பிள்ளையார் பிடிப்பதற்காகக் களிமண்ணை மொத்தமாக வைத்ததுபோலாகும். ஆனால் வெறும் களிமண் உருண்டை பிள்ளையாராகிவிடுமா? அதற்குக் கண், காது, மூக்கு முதலிய அங்கங்களும் அமைந்தபிறகுதான் வணங்குவதற்குரிய பிள்ளையாராகும். அதேபோல் இந்தத் தீர்மானத்திற்கும் செயல் முறைக்கான கண், காது, மூக்கு முதலியவற்றை அமைக்க வேண்டும். 'வர்க்க உணர்ச்சி' என்ற உயிர்த் துடிப்புகளை

வேண்டும். உருவமும், உயிரும் தோ... ...லாழிய, வெறும் ஆவலைத் தெரிவிப்பதால்மட்டும் பலனில்லை.

ஆனால், உருவம் தருவது யார் என்பதே முக்கியப் பிரச்சினை. பிள்ளையார் பிடித்துப் பழக்கமில்லாதவர், அல்லது பிள்ளையார் பிடிக்க மனமில்லாதவர் கையில் மண்ணைத் தந்தால் அவர்கள் பிடிப்பது பிள்ளையாராக இருக்காது; குரங்காகத்தான் இருக்கும்.

நமது மாகாண மந்திரிகளும், தலைவர்களும் ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லுகின்றார்கள். "சோஷியலிசத்தை அமுல் நடத்துங்கள்" என்றால், அது நேருவுக்குத் தெரியும், காந்தியடிகளுக்குத் தெரியும், அவர்களைவிட தீவிர சோஷியலிஸ்டுகள் வேறு யார் இருக்கின்றனர்? அவர்களை நம்புங்கள்" என்கின்றனர். காந்தியடிகளிடமும், பண்டித நேருவிடமும் நாம் கொண்டுள்ள அன்பு இவர்களுக்குக் குறைந்ததல்ல. காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் எவ்வளவோ அநீதிகள் நடக்கின்றன; காங்கிரஸ் அரசாங்கத்தின் பெயராலும் அடக்குமுறைகள் தாண்டவமாடுகின்றன. என்றாலும், உழைப்பாளி மக்கள் இன்னமும் காங்கிரசை உள்ளன்புடன் நேசிக்கின்றனர். காரணமென்ன? காந்தியடிகள்பால் கொண்ட நம்பிக்கையும் நேருவின்பால் கொண்ட நல்லெண்ணமுமேயாகும். இன்றைய காங்கிரசிலே அவ் விருவரைத்தவிர ஏழை மக்களின் இன்னலைப்பற்றி எண்ணியேனும் பார்ப்பவர் வேறு எவர் இருக்கின்றனர்? ஆனால், நேரு பிரதமராக இருப்பதால் சோஷியலிசம் நாளையே வந்துவிடும் என்று நம்பிவிடுவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். சோஷியலிசத்தை ஏற்றுக்கொண்டு, அதேநேரத்தில் காந்தியடிகள், நேரு போன்றவரின் பெயரைச் சொல்லிக்கொண்டு சோஷியலிச இயக்கத்திற்கு முட்டுக்கட்டை யிடுவோர்தான் நேருவுக்குப் பின்னே இருக்கின்றனர். இந்தத் தீர்மானமும் சோஷலிச எண்ணத்தைமட்டும் வெளியிடுகிறதேயொழிய, இயக்கத்திற்கு ஆதரவு காட்டவில்லை.

பண்டிதநேரு பிரதமராக இருப்பதாலேயே சோஷலிசக் கிளர்ச்சியை விட்டுவிடுவதா? நேருவிடம் நாம் வைத்துள்ள நம்பிக்கையைப்போன்று அவரது உடன் அமைச்சர்கள்மீது வைப்பதற்கில்லை. அண்மையில் சர்தார் பட்டேல், கல்கத்தா முதலாளிகள் கூட்டத்தில் பேசியதைக் கேட்டபிறகு, அந்த படேல் ஆதிக்கத்தில் சோஷலிச இந்தியா உருவாகுமென்று நம்பமுடியுமா? "முதலாளிகளே! திருவாளர்கள் ஆர். கே. சண்முகம், பாபா, மத்தாய், முகர்ஜி ஆகியோர் உங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். உங்கள் நலன்களை அவர்கள் பத்திரமாகப் பாதுகாப்பார்கள். தேசியத் தொழிற்சங்கம் துவக்கியதும் உங்கள் நன்மைக்காகத்தான். நீங்கள் வீணாகப் பயப்படவேண்டாம்" என்று முதலாளி வர்க்கத்திற்கு ஆறுதல் கூறினார் சர்தார் பட்டேல்.

இந்து மகாசபைத் தலைவர் முகர்ஜி, சோஷியலிஸ்டான நேரு சர்க்காரில் இடம்பெற்றதை நம்மால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. தேசியப் போராட்டத்தில், தளபதிகளாகத் தகுதியுடையவர்களை எல்லாம் தலைவர்களாக ஏற்றோம். அவர்கள் வர்க்கமென்ன? வாழ்க்கை நலன்களென்ன? என்பதைப்பற்றி எல்லாம் நாம் அப்போது சிந்திக்கவில்லை; சிந்தித்திருக்கவும் முடியாது. ஆனால், தேசியப் போராட்டம் முடிந்துவிட்டபிறகு இன்று பொருளாதாரக் கண்கொண்டு பார்க்கிறோம். அன்று யாருக்கெல்லாம் நாம் பூமாலையும் புகழ் மாலையும் சூட்டிப் பாராட்டினோமோ, அவர்களில் பலரை இன்று பழிக்க நேர்ந்துவிட்டது.

காக்கையும் குயிலும் கறுப்புநிறமானதால், சாதாரண காலத்தில், எது குயில்; எது காக்கை என்று பிரித்துப் பார்ப்பது கடினம். என்றாலும், வசந்தகாலம் வந்தால் வாய் திறந்து கூவுவது அவற்றின் இயற்கை. அப்போது குரலின் வேற்றுமையைக்கொண்டு, எது காக்கை; எது குயில் என்பதை தெரிந்துகொள்ள முடியும். அதுபோலவே, காங்கிரஸ் அதிகார பீடத்தில் ஏறியுள்ள இந்நாள் வசந்தகாலம் போன்

கலைப்பகுதி

உயிரோவியம் [நாடக விளக்கம்]

சி. வே.

'உயிரோவியம்' என்ற பெயரால் திரு. நாரணதுரைக் கண்ணன் அவர்களால் எழுதப்பட்ட கதையை ஸ்ரீ பால சண்முகானந்த சபையார் இப்போது கோவையில நாடகமாக நடித்துக்காட்டி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றனர். அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றில சிறந்து விளங்

றது. அமைச்சர்களின் குரலைக்கொண்டே, அவர் தம் கொள்கையைக்கொண்டே நாம் அவர்களைப் பாராட்டவும், குறைகூறவும் உரிமையுண்டு. பழைய தேசீயப் போராட்ட காலத்திய தலைமை இன்று பொருந்தாது.

இன்று நீங்கள் நிறைவேற்றவிருக்கும் தீர்மானம் காங்கிரசின் மூலம்தான் அமுல் நடத்தப்படவேண்டும். ஆனல், காங்கிரஸில் பிரதானப்பதவிகளை வகிப்பவர்கள் சோஷியலிசத்திற்கு மாறுபட்ட, சோஷியலிசத்தை விரும்பாத சொத்துரிமையுடையவர்களாவர். முதலாளித்துவ குரங்கு பிடித்துப் பழக்கப்பட்ட அவர்கள், நீங்கள் வணங்க விரும்பும் பிள்ளையார் பிடிப்பார்களென்று நம்பினல் இறுதியில் ஏமாற்றமே அடைவீர்கள். காங்கிரசின்மூலம் சோஷியலிச இந்தியா உருவாகவேண்டுமானல் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் சொத்துரிமை உடையவர்கள் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிகளில் இடம் பெருத வகையில் காங்கிரஸ் விதிகளைத் திருத்தவேண்டும். (கைத்தட்டல்) திறமை, தேசபக்தி, தியாகம் என்று தங்களைப்பற்றித் தாங்களே தீர்ப்பு கூறிக்கொண்டு பணக்காரக் கூட்டம் காங்கிரசை முற்றுகையிட்டுள்ள இன்றைய நிலைமையை மாற்றி அமைப்பதுதான் இந்தத் தீர்மானத்திற்கு உருவமும் உயிரும் அளிப்பதற்கான ஒரேவழி (பலத்த கைத்தட்டல்.)

கும் நடராஜன், கற்பகம், சந்திரசேகரன் ஆகிய பாத்திரங்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு தத்தம் வாழ்க்கையில் காதல் இன்பத்தை உடலளவில் பெறமுடியாதபடி சபதம் மேற்கொண்டு வாழ்க்கை நடத்த முற்படுவதாகக் கதை முடிகிறது.

நடராஜனை நடிக்கும் திரு. டி. கே. சண்முகம் வெகு திறமையாக நடிக்கிறார். கற்பகத்திற்கு அவர் பாடம் சொல்லும்போதும், அவளுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டபின் நடைப்பிணம்போல் செயல் மறந்து நிற்கும் நிலையிலும், இறுதியில், அவளைச் சோலையில் சந்தித்துப் பேசும் கட்டத்திலும் அவருடைய நடிப்புத் திறமை உச்சநிலையை அடைகின்றது.

திருமதி. திரௌபதி கற்பகமாக நடிக்கிறார். வீரம் ததும்ப நடிப்பதில் கைதேர்ந்த இவர் இந்நாடகத்தில் சோக பாகத்தை ஏற்று மிகப் பொருத்தமாக நடித்திருக்கிறார். நன்றாகப் பாடுகிறார். நடராசனோடு சோலையில் பேசும் போது தன் காதல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவனுடைய தவறான போக்கை இனிய மொழிகளால் எடுத்துக் கூறி அவன் மனத்தை மாற்றும் கட்டத்திலும், 'தன் உடலுக்கு நாயகனை வாய்த்துவிட்ட' சந்திரசேகரனோடு வாதாடி தன் உண்மை நிலையை விளக்கும் போதும் கண்டோர் மனம் உருகும் வண்ணம் நடிக்கிறார்.

ஐ. சி. எஸ். படித்த மாப்பிள்ளை சந்திரசேகரனை நடிக்கும் திரு. டி. கே. பகவதி நாடகத்தின் கடைசி கட்டத்தில் தப் உணர்ச்சி ததும்பும் நடிப்புத் திறமையைக் காட்டி பார்ப்பவரின் பாராட்டுதலைப் பெறுகிறார். நடராஜன், கற்பகம் ஆகியோரின் உண்மைக் காதல் நிறைவேறாதபடி,

அணையா ஒளி!

தே. போ. மீனாட்சிசுந்தரனார்

மூப்பது ஆண்டுகளாக இந்திய வானத்தில் ஒளிவீசிய பேரொளி; பலருக்கும் வழிகாட்டிய அன்பொளி; நாற்பது கோடி மக்களுக்கும் புத்துயிர் அளித்துத் தன்மதிப்புந் தன் நம்பிக்கையும் கொடுத்துத் தட்டி எழுப்பித் தன்னரசு கேட்க வாயும் தந்து உரிமை வாழ்வினையும் வாங்கித் தந்த அருள் ஒளி; பகைத்துக் கிடந்தோரை உடன்பிறந்தார் எனத் தெளிய முயன்ற ஒற்றுமை ஒளி; அடக்கு முறையாலும் வழக்க ஒழுக்கத்தாலும் தயங்கிப் புழுங்கிக் கிடந்தாரைத் தன்னைப்போல எண்ண நடந்து அந்த நடத்தையின் பயனாகத் தீண்டாமைப் பேய் ஒழியக் கோயில்கள் எல்லாம் அனைவருக் கும் தந்தையாம் இறையவன் நிலையமாய் எல்லோருக்கும் இடந்தருமாறு செய்த கடவுள் ஒளி; பெண்களின் பெருமை யைத் தாய்மையின் சீராகப் பாராட்டி உலகப் பெருமணி களாக வாழவைத்த தாயொளி; "உழைப்பின் பெருமையை உணர்வதே கல்வி, செயல் வழியே அறிவுவளரும்" என்றெல் லாம் காட்டிச் சிறுவருக்கும் விடுதலை காட்டிய தந்தை ஒளி; உலக முழுதினையும் குடும்பமாகக் கொண்டுவாழ்ந்த உண்மை ஒளி; ஆ! அது மறைந்தது. அழியுமா அந்த ஒளி. கதிரவன் மறைவான்; ஆனால், அழியான். அன்றாடம் நாம் அறியும் உண்மை இது. புறஇருளை ஓட்டுகின்ற இந்தக் கதிரவன் ஒளியே மறையவில்லை என்றால் அவனிலும் பலவகையில் சிறந்து நம் மன இருட்டை எல்லாம் போக்கிப் புத்துயிரும் புத்துணர்வும் தந்து தூங்காமலே உழைத்து வாழ்ந்து மக்க ளைக் கடவுளாகக் காணும் பார்வையும் கொடுத்துப் புழு வாய்க் கிடந்த நம்மை இந்திய நாட்டுப் பழைய பண்பாட்டுக் கும் இந்நாளைய முன்னேற்றத்திற்கும் ஏற்பப் பொது மக்களாக்கிய இந்தக் கடவுட் பேரொளியோ மறையும்?

சாவு என்பது உலகின் இயல்பு. 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்று பாட்டியும் பாடுகின்றாள். சாக்ரடீஸ் மறைந்

தார்; கண்ணபெருமான் மறைந்தார்; சிக்கிய குரவர் பலர் மறைந்தனர். பிறர் கொடுமைக்கு இரையாகியே மறைந்தனர். இந்தப் பேரொளியும் இந்நாளைய துப்பாக்கிப் புகையில் மறைந்து நிற்கின்றது. எந்தவகையாலோ ஒருவகையால் சாவு வந்துதான் தீரும். சாவாதிருத்தலும் தக்கதன்று. சாவதிலும் வாழ்வு உண்டு, பெருவாழ்வு உண்டு. இந்தப் பேரொளியின் வழியே நாம் அந்த உண்மையைக் காணவில்லையா? இந்தப் பேரொளியின் பெருமையை நாமே அறியாது கிடந்தோம். அதனால் அன்றோ நம்மில் ஒருவன் அதனை மறையச் செய்தான். நாம் இன்னும் மிகப்பேர் ஆழத்தில் புழுங்குகின்றோம் என்பது தெளிவாகவில்லையா? அப்பேர் ஒளியில் மிகமிக உயர்ந்தோம். ஆனால் இன்னும் எவ்வளவோ உயர வேண்டும்! புறத்தே அந்த ஒளி இருக்கும்வரை அதன்மேல் அனைத்துச் சுமையையும் போட்டுவந்தோம். அதனாலேயே அந்த ஒளி மறையவேண்டியதாயிற்று. இனி அந்த ஒளியை மனத்தில் வைத்து மறவாது அந்த ஒளி நிழலில் நடையாட வேண்டும்.

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே! அப்பெருமானைக் கண்ணாலேகாணவும், அவரோடு சிலபோதேனும் குலாவவும், அவர் பேச்சினைக் கேட்கவும், "அவர் வழியே செல்கின்றேன்" என பெருமை பாராட்டிக் கொள்ளவும் கொடுத்து வைத்தாய். அந்தப் பேரொளி மறைந்தாலும் மனத்தைவிட்டு அகலுமோ! அந்தக் குரல் கேட்கவில்லையா? அந்த அன்பும் இன்பம் பூத்த முகமும் உயிரோவியமாக விளங்கவில்லையா! இன்னும் என்னவேண்டும்! நம்மிலும் பேறு பெற்றார் யார்? கொலைஞர்கள் நிறைந்த நாட்டிலும் அன்பொளி தோன்றிய நாளில் வாழ்ந்தோம்; அன்பொளியை மறக்கமுடியாத பெருவாழ்வு பெற்றுள்ளோம். அதன் ஆற்றலினை இனி உலகம் காணும்.

வாழ்க நீ எம்மான் காந்தி. உன் வழியே செல்ல முனைந்து நிற்கும் அறிவிலா மக்கட்கு வழிகாட்டு. அழியாத அண்ணலே வாழி வாழி வாழி.

அ[illegible] எமனைக வாய்த்து விட்டதற்காக—தன்னையும் மீறிய சந்தர்ப்ப விசேஷத்தால் ஏற்பட்ட குற்றத்திற்காக—தானும் இல்வாழ்க்கை இன்பத்தைத் தியாகம் செய்வதாக சபதம் செய்யும்போது காண்போருக்கெல்லாம் மயிர்க்கூச் செறிகிறது.

கதையில் வலியுறுத்தப்படும் கருத்துக்கேற்றவகையில் நடைபெறும் ஓரங்க நாடகமும், (மகாபாரதத்தை அடிப் படையாகக் கொண்ட கற்பனைக் கதை) அமைத்திருப்பது சிந்தனைக்கு விருந்தளிப்பதாகும். வேலைக்கார வீராசாமி யாக வரும் திரு. ராமசாமி தனக்கேயுரிய சிறந்த முறையில் நடித்தும் பாடியும் சபையோரை இன்பக்கடலில் ஆழ்த்து கிறார். 'லவ்வு; கன்னியம்மா பேரிலே லவ்வு' என்று அவர் பாடும் பாட்டு பண்டிதர், பாமரர் இரு சாராரும் களிக்கத் தக்கது—மறக்கமுடியாது. 'சிலப்பதிகாரத்தின் இலக்கி யப் பெருமை' 'உயிரோவியமே காதல்' முதலிய பல சிறந்த பாடல்களை அமைத்துத் தந்து திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி நாடகத்தைச் சிறப்புறச் செய்திருக்கிறார். வேலைக்காரி கன்னியம்மாவாக நடிக்கும் திருமதி. ராஜம் தன் பாகத்தைக் கச்சிதமாக நடிக்கிறார்.

தமிழ்ப்பண்டிதை மங்களமாக நடிக்கும் திரு. சீதா ராமன் வெகு மிடுக்சாகவும் இயற்கையாகவும் நடிக்கிறார். பொறாமை, காமம், வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மை, மற்றவ ருக்குத் தீமை செய்துவிட்டு உள்ளங்குளிரும் தன்மை முதலிய தீய குணங்களை, படிப்படியே வெகு திறமையாக வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்குகிறார். கற்பகத்தின் தந்தை, இயற்றமிழாசிரியர், ஆங்கில மோகங்கொண்ட இளைஞர், கல்லூரி மாணவிகள் முதலியவர்களாகத் தோன் றும் ஒவ்வொருவரும் நன்கு நடிக்கின்றனர்.

பொதுவாக, இந்த நாடகம் பாமர மக்களுக்குக்கூட தமிழ்ப்பற்றை யூட்டி தமிழிலக்கியத்தின் மேன்மையை உணர்த்தப் பயன்படும் என்பதில் ஐயமில்லை. ஆங்கில மோகத்தால் தாய்மொழியைப் புறக்கணிக்கும் போக்கை கல்லூரி மாணவிகள் பேச்சுவாயிலாகவும், சிவநெறிக் கழகச் சொற்பொழிவிற்குச் செல்ல வழிகேட்கும் ஓர் இளைஞன் வாயிலாகவும், ஆங்கிலத்திலேயே பேசும் தமிழாசிரியை வாயிலாகவும் உணர்த்துகின்றது நாடகம்.

ராதாகிருஷ்ண நடனத்தோடு பாரதியின் 'நந்தலாலா' பாட்டைச் சேர்த்திருப்பது பாராட்டத்தக்கது. பஸ்மாசுர மோஹினி நாடகம் கதைக்கு ஒருவித சம்பந்தமும் இல்லாமல் இருப்பதால் எடுத்துவிடலாம். புறநானூற்றில் காணப்படும் ஏதாவதொரு வீர நிகழ்ச்சியையோ, அல்லது வேறு ஏதாவதொரு ஓரங்க நகைச்சுவை நாடகத்தையோ, அதற்குப் பதிலாக சேர்க்கலாம். இப்போதெல்லாம் கல்லூரிகளில்கூட அத்தகைய கலை நிகழ்ச்சிகளே இடம் பெறுகின்றன.

மிக உயர்ந்த இந்த நாடகத்தை உருவாக்கிய திரு. நாரண துரைக்கண்ணன் ('பிரசண்டவிகடன்' ஆசிரியர்—எழுத்தாளர் உலகத்தில் 'ஜீவா' எனப்படும் புகழ்பெற்ற கதாசிரியர்) அவர்களுக்கும் அதைக் கலையுணர்வு ததுப்ப நடித்து மக்களிடையே தமிழுணர்வைப் பரப்பிவரும் பால சண்முகானந்த சபையாருக்கும் நம்முடைய மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழரசுப் பிரசாரம்

திருவந்திபுரம்:— காஞ்சீவரத்தை அடுத்துள்ள திருவந்திபுரத்தில் கடந்த 28-1-48ல் தமிழரசுக் கழகக் கிளை துவக்கப்பட்டது. மாலை 3 மணிக்கு திரு. ம. பொ. சி. தமிழரசுக் கொடியை உயர்த்திய பின்னர் கழகத்தைத் துவக்கிவைத்தார். அடுத்தபடியாக பிறிதோரிடத்தில் 'வ. உ. சி. சிறுவர் சங்கம்' ஒன்றை ஆரம்பித்துவைத்து சங்கச் சிறுவர்களின் தமிழின உணர்ச்சியைப் பாராட்டினார். சங்க செயலாளர் திரு. பாலசுந்தரம் ம. பொ. சி. க்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். பெரியதோர் ஊர்வலம் புறப்பட்டு பொதுக்கூட்டத்திற்கான மைதானத்தை அடைந்தது. அங்கு தமிழரசுக் கழகம், நேதாஜி வாலிபர் சங்கம், குமரன் வாலிபர் சங்கம் முதலியவற்றின் சார்பில் ம. பொ. சி. க்கு வரவேற்பிதழ்கள் வாசிக்கப்பட்டன. திருவாளர் சி. வெங்கடசாமி, தெய்வசிகாமணி, ஆறுமுகம் ஆகியோர் பேசிய பின்னர், ம. பொ. சி. கழகக் கொள்கைகளையும் தமிழரசுக் கொடியின் தத்துவங்களையும் விளக்கினார். திரு. வேலாயுதம் நன்றி கூறினார்.

கோனுபட்டு:— பிப்ரவரி 7ம் தேதி நடைபெற்ற இவ்வூர் தமிழரசுக் கழக செயற்குழுவின் கூட்டத்தில் சாந்தியடிகளைக் கொன்ற மதவெறியர்களின் சதிச்செயல் கண்டிக்கப்பட்டதுடன் அடிகள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கப்பட்டது மற்றும் வகுப்புவாதக் கட்சிகளை உடனடியாக கலைத்து விடுமாறு மத்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது.

தலைநாயர் (தஞ்சை ஜில்லா):— இவ்வூர் தமிழரசு வாதிகளின் கூட்டமொன்று ஜனவரி-3ந் தேதி மாலை நடைபெற்றது. அவ்வமயம் உள்ளூர் தமிழரசுச் கிளைக்கழகம் துவக்கப்பட்டு பின்வரும் செயற்குழு அமைக்கப்பட்டது:

தலைவர்:— சோ. பிச்சையன், துணைத் தலைவர்: பொ. மூர்த்தி, செயலாளர்: பொ. பக்கிரிசாமி, துணைச் செயலாளர்: க. முருகையன, பொருளாளர்: ரா. குப்புசாமி, மற்றும் பத்து செயற்குழு உறுப்பினர்.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம் 1-29 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

தமிழரசு வெல்க!



திரு. ம. பொ. சிவஞானம்

மூவர்ணப் படம் — அளவு $8\frac{1}{4} \times 10$ அங்குலம் விலை 8 அணா

(தபால் செலவு தனி)

வியாபாரிகளுக்கும் அதிகப் பிரதிகள் வாங்குவோருக்கும் கமிஷன் தருகிறோம்.

பாதிப் பணம் முன்னதாக அனுப்பவேண்டும். படம் வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழரசுப் பண்ணை

2 சுப்பராய கிராமணி தெரு, சேத்துப்பட்டு, சென்னை-10